# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்




வார இதழ் – இலவசம்

சனி, ஜனவரி 12, 2019. இதழ் - 46



**பெண்களின் உடையில் அரசியல் இருக்கிறதா?**

அண்மையில் வேஷ்டி தினம் கொண்டாடப்பட்டது.

பக்கம் - 14



**ஆசிரியர்களே, மாணவர்களே, பெற்றோரே!**

ஒரு மாணவனின் எதிர்காலம் குறித்த அச்சம்..

பக்கம் - 12




**அரசுக்கு புரியும் மொழியில் தமிழர் அரசியல் தலைமை பேச வேண்டும்**

வலயங்களாக தமிழர் தாயகப் பூமி கூறாக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டு

பக்கம் - 06



**அருட்பணி பெஞ்சமின் கென்றி மில்லர் - இயேசு சபை**

மேற்கத்தைய துறவிகளின் வருகையானது இலங்கையில்

பக்கம் - 03



## கிழக்குத் ஹர்த்தால்: அரை வெற்றி - அரைத் தோல்வி

கிழக்கின் ஆளுனராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அவர்கள் நியமிக்கப்பட்டதை கண்டித்து கிழக்கு மக்கள் ஒன்றியம் என்ற பெயரிலான அனாமதேய அமைப்பு ஒன்றினால் அழைப்பு விடுக்கப்பட்ட கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர் பகுதிகளில் மாத்திரமே வெற்று பெற்றுள்ளது.

கிழக்கின் ஏனைய இரு மாவட்டங்களான அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் ஹர்த்தாலுக்கான அழைப்பு தொடர்பிலான பலவீனம் காரணமாக அது பிசுபிசுத்துப் போனதாக அங்குள்ள செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காலையில் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் மூடியிருந்தன. முஸ்லிம்களின் கடைகள் மட்டக்களப்பு நகரப் பகுதியில் காலையில் மூடியிருந்தாலும் பின்னர் அவை திறக்கப்பட்டன.

எவரிடம் இருந்தும் முறைப்படியான கோரிக்கை வரவில்லை என்றும் அனாமதேயமான துண்டுப் பிரசுரங்களை வைத்துக்கொண்டு தமக்கு இப்படியான ஹர்த்தால்களில் கலந்து கொள்வது சிக்கலாக இருந்ததாகவும் மட்டக்களப்பு வர்த்தக சங்க வட்டாரங்கள் கூறின.

கடந்த தடவை தண்ணீர் போத்தல் தொழிற்சாலையை எதிர்த்து நடத்தப்பட்ட ஹர்த்தாலின் போது மட்டக்களப்பு நகரில் தமிழ்-முஸ்லிம் கடைகள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கார்ப்பரேட் வணிக நிறுவனங்களான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.
அரசாங்க அலுவலகங்கள் பணியாற்றின. பாடசாலைகளில் மாணவர் வருகை

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## கிழக்கு ஆளுனர் - பிரச்சினைக்கு யார் பொறுப்பு?



கிழக்குக்கான ஆளுனராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அவர்கள் நியமிக்கப்பட்ட விவகாரம் மட்டக்களப்பில் ஒரு ஹர்த்தால் நடத்தப்பட்டது வரையிலான நிலைக்குச் சென்று முடிந்திருக்கிறது.

இந்தக் ஹர்த்தால் வெற்றியா, தோல்வியா என்பது ஒருபுறம் இருந்தாலும், இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கான கிழக்குத் தமிழ் மக்களின் தார்மீக உணர்வை குறைகூறமுடியாது.

இலங்கையில் நடந்துமுடிந்த அரசியல் நெருக்கடிகள், அடுத்தடுத்து வந்த ஆட்சி மாற்றங்கள் ஆகியவற்றால் குழம்பிப்போய் இருக்கும் இலங்கையின் ஏனைய மாவட்ட மக்களுக்கு இந்த விவகாரம் ஒரு பெரிய விடயமாக தென்படாவிட்டாலும், கிழக்கில் இந்த விவகாரம் கொஞ்சம் சூடான விடயந்தான்.

மூவின மக்களும் கிட்டத்தட்ட ஒரே அளவில் வாழுகின்ற கிழக்கு போன்ற மாகாணங்களைப் பொறுத்தவரை எவரை ஆளுனராக நியமிப்பது என்பது கொஞ்சம் இலகுவில் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய விடயந்தான்.

ஆளுனர் ஹிஸ்புல்லா

கிழக்கின் ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளை விட கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் ஹிஸ்புல்லா அவர்களுடன் ஒப்பீட்டளவில் கொஞ்சம் முரண் போக்கையே கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் முஸ்லிம் - தமிழ் உறவுகளில் ஏற்பட்ட விரிசல்களும் அதன் காரணமாக தாம் புறக்கணிக்கப் பட்டதாகவும் இங்குள்ள தமிழ் மக்கள் நம்புவது இதற்குக் காரணம்.



நில ஆக்கிரமிப்புகள், தண்ணீர் போத்தல் தொழிற்சாலை போன்ற பல விடயங்களில் ஹிஸ்புல்லா அவர்கள் மீது கிழக்குத் தமிழ் மக்கள் கணிசமான சந்தேகத்தை கொண்டிருக்கிறார்கள். இவை சந்தேகங்கள்தான். ஆனால், அவை உறுதி செய்யப்படாதவை. ஆனால், சில வருடங்களுக்கு முன்னதாக வெளியான ஹிஸ்புல்லா அவர்கள் பேசுவதாகக்

**சீவகன் பூபாலரட்ணம்**

காண்பிக்கப்படும் ஒரு வீடியோதான் இவை எல்லாவற்றையும் விட தமிழ் மக்களுக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்னர் கூறியவை சந்தேகங்கள். ஆனால் இந்த வீடியோ விவகாரம் தமிழ் மக்களுக்கு தமது இருப்புக் குறித்த ஒரு அச்சத்தை ஏற்படுத்திய ஒன்று. அந்த வீடியோ உண்மைத்தன்மையானதா,

தொடர்ச்சி... (பக்கம் -02 )



## புதிய அமைச்சர்கள்

ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அமைச்சரவை அந்தஸ்து இல்லாத இரு அமைச்சர்களையும் ஒரு பிரதி அமைச்சரையும் புதிதாக நியமித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தகவல்களின்படி ரவீந்திர சமரவீர தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகளுக்கான அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சராகவும், வீ. ராதகிருஷ்ணனை சிறப்பு பகுதி அபிவிருத்திக்கான அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சராகவும் நியமித்துள்ளார்.

துறைமுகங்கள் விமானப்போக்குவரத்து துணை அமைச்சராக அப்துல்லா மஃரூப் நியமிக்கப்பட்டார்.

## சர்வதேச விவசாய ஆய்வு மாநாடு



பேண்தகு விவசாயத்தில் புதுமையும் கண்டுபிடிப்பும் எனும் கருப்பொருளில் இரண்டாவது விவசாய ஆய்வு மாநாடு கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலை வளாக நல்லையா மண்டபத்தில் புதன்கிழமை (09) நடைபெற்றது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்கின்றது.



மட்டக்களப்பு நகரில் புகழ்பூத்த கல்லூரியும்,204 ஆண்டுகள் பழமை வாய்ந்ததும்,இலங்கையின் முதலாவது ஆங்கிலப் பாடசாலையுமான மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி இன்று வரையும் மாகாணப் பாடசாலையாகவே இருந்தது.

இருப்பினும் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியால் அது இப்போது தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலையாக தரமுயர்த் துவதற்கான உத்தியோகபூர்வமான அனுமதியை கடந்த 2018.12.29 கிழக்கு மாகாண ஆளுநர் வழங்கியிருந்தார்.

தேசிய பாடசாலையாக தரமுயர்த் துவதற்கான உத்தியோகபூர்வமான அனுமதி கடிதத்தை முன்னாள் பழைய மாணவர்சங்கத் தலைவர் எஸ்.சசிகரன் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் முதல்வர் இராசதுரை பாஸ்கரிடம் வியாழக்கிழமை(10.1.2019)

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கிழக்கு ஆளுனர் - பிரச்சினைக்கு யார் பொறுப்பு?

தொடர்ச்சி...

ஹிஸ்புல்லா அப்படி பேசினாரா என்ற விடயங்கள் வேண்டுமானால் ஆய்வுக்குரியவையாக கூறலாம். ஆனால், அந்த வீட்யோ தமிழ் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அவரோ அல்லது அரசாங்கமோ மறுக்க முடியாது. இதனை ஒரு இனப்பதற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒர் காணொளியாக தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். அதில் நியாயமில்லை என்றும் கூறமுடியாது.

ஆகவே அனைத்து மக்களுக்குமான ஒரு அரசியல் தலைவர் என்ற வகையில் ஹிஸ்புல்லா அவர்கள், தமிழ் மக்களின் அச்ச உணர்வைத் தணிக்க முயன்றிருக்க வேண்டும். அதற்கான தனது விளக்கத்தை இவ்வளவு நாட்களில் கொடுக்க விளைந்திருக்க வேண்டும். இங்கு அவரை விசாரணைக்கு அழைக்க வேண்டும் என்ற தோரணையில் இந்தக் கருத்தைக் கூறவில்லை. ஆனால், மூவின மக்கள் வாழும் ஒரு பகுதியின் அரசியல் தலைவர் என்ற வகையில் சக இனமக்களின் நியாயமான அச்ச உணர்வை தணிக்க வேண்டிய கடமை அவருக்கு இருக்கின்றது. இந்தக் காணொளியை அவர் வெறும் சந்தேகத்துக்கு உரிய ஒன்று என்று கூறிக் கடந்து செல்ல முடியாது. இது அவர் தரப்பில் ஒரு பின்னடைவு.

முஸ்லிம் மக்களையோ, அல்லது கிழக்கைச் சேர்ந்த வேறு இன்னொமொரு இனத்தவரையோ கிழக்கில் ஆளுனராக போட முடியாது என்று எவராலும் வாதாட முடியாது. உண்மையில் கிழக்கை சேர்ந்த ஒருவர், அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அங்கு ஆளுனராக நியமிக்கப்படுவது வரவேற்கத்தக்கதே. அவர் மீது சந்தேகம் இருக்கும் போதுகூட அவருக்கு அந்தப் பதவி வழங்கப்படலாம். ஆனால், இப்படியாக ஒரு சமூகத்துக்கு அச்ச உணர்வு இருக்கும் தருணத்தில், அந்த அச்ச உணர்வை நீக்காமல் இப்படியான மிகவும் முக்கியம் வாய்ந்த ஆளுனர் பதவிக்கு நியமிக்கப்படுவதை ஏற்கமுடியுமா என்று தெரியவில்லை. ஹிஸ்புல்லாவை பொறுத்தவரை இந்தக் காணொளி பற்றி அவர் பேசவில்லையாயினும், தான் அனைத்து மக்களுக்கான ஆளுனராக செயற்படுவேன் என்று பேசியிருக்கிறார். இனி அவர் செய்ய வேண்டியது இரண்டு விடயங்கள். ஒன்று தமிழ் மக்களின் அச்ச உணர்வு தொடர்பாக அவர் மனந்திறந்து பேசவேண்டும். அடுத்ததாக தனது எதிர்கால நடவடிக்கைகளில் மூவின மக்களுக்கான ஒரு நியாயமான ஆளுனராக தான் செயற்படுவேன் என்பதை செயற்பாட்டில் அனைவரும் உணரும்படி அவர் செய்ய வேண்டும்.

ஜனாதிபதியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும்

ஆளுனர் நியமிக்கப்பட்டது ஜனாதிபதியால். தமக்கு எதிரான நடவடிக்கையாகவே ஹிஸ்புல்லாவை அவர் நியமித்திருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்களாவது பேசியிருக்கிறார்கள். ஏனைய மாகாணங்களுக்கு அபிவிருத்தி அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட போது, போரால் பாதிக்கப்பட்ட கிழக்குக்கு மாத்திரம் அப்படியான அமைச்சு நியமிக்க வழிசெய்யாததில் இருந்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தவறு ஆரம்பித்துவிட்டது. அதுவும் இதுவரை இல்லாமல், ஆட்சி மாறிய போது கிழக்கு தமிழர் ஒருவரை அந்த மாகாணத்துக்கான துணை அபிவிருத்தி அமைச்சராக நியமித்திருந்தும், ஆட்சி மீண்டும் மாறியதும், அந்தப் பதவியை இந்த ஆட்சி இல்லாது ஒழித்த போது வாழாவிருந்ததில் இருந்தே அவர்கள் சறுக்கத் தொடங்கிவிட்டார்கள். அதிலிருந்தே தாம் புறக்கணிக்கப்படுகிறோம் என்ற உணர்வு இங்கு கிழக்குத் தமிழர் மத்தியில் வளரத்தொடங்கிவிட்டது. அப்படியிருக்க, ஆளுனராக கிழக்கு முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டமை அங்குள்ள தமிழ் மக்களுக்கு மனதில் பெரும் வேதனையை ஏற்படுத்திவிட்டது. நடப்புகள் இப்படியிருக்க, ஏனையவர்கள் மீதும், ஜனாதிபதி மீதும் குற்றஞ்சாட்டிக்கொண்டு இருப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உரிய, பொறுப்பான நடவடிக்கை அல்ல.



ஹிஸ்புல்லாவிடம் அவர்கள் பேசினார்கள் என்பது மாத்திரம் கிழக்கு தமிழர்களுக்கு நம்பிக்கையைத் தந்துவிடாது. அடுத்த விடயம், கிழக்கு தமிழ் மக்களுக்கு பெரும் அதிருப்தி ஒரு விடயத்தில் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையில், அதனை களைய உரிய நடவடிக்கைகளை எடுக்காமல், சும்மா காரணம் மாத்திரம் சொல்லிக்கொண்டுதான் இன்றுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருந்து வருகின்றது.

இது கிழக்குத் தமிழர்களை அனாமதேய அழைப்புகளை ஏற்று ஹர்த்தாலுக்குச் செல்லும் அளவுக்கு தள்ளியுள்ளது. இதற்கான பொறுப்பான, போதுமான நடவடிக்கையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உரிய நேரத்தில் எடுத்திருந்தால், கிழக்குத் தமிழர்கள் “தாம் ஒரு அரசியல் அனாதைகள்” என்று எண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள். அனாமதேய அழைப்புகளை ஏற்று பலவீனமான ஒரு ஹர்த்தாலை நடத்த உந்தப்பட்டிருக்க மாட்டார்கள். இப்படியான நிலைமைகள் தொடர்ந்தால் இவை நாட்டில் இன ஐக்கியத்தை மீண்டும் குலைக்க வழி செய்துவிடும் என்பதை அனைவரும் எப்படி மறந்தார்கள் என்பது இங்கு வேதனையாகவே இருக்கின்றது.

அனாமதேய அழைப்புக்கள்


வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய இயக்கங்களின் காலங்களில் சில புதிய புதிய அமைப்புக்கள் மூலம் இயக்கங்கள் போராட்டத்துக்கு அழைப்பது பழகிப்போன ஒன்று. அந்தப் பாணியையே இன்னமும் தொடருவது தோல்விக்கே வழி செய்யும் என்பதை இந்த ஹர்த்தால் காண்பித்திருக்கின்றது. மட்டக்களப்பில் தமிழ் மக்கள் அழைப்பை ஏற்று ஆதரவு தந்திருக்கிறார்கள். ஆனால் ஏனைய இடங்களில் நிலைமை பிசுபிசுத்துவிட்டது.

மக்கள் அழைத்தவர் யார் என்று அறியாமலேயே ஆதரவு தந்தது அவர்களது விரக்தி நிலையை காண்பிக்கின்றது. ஆனால், அடையாளம் இல்லாத அமைப்புக்களின் பின்னர் செல்வது நீண்ட பாதையில் தோல்வியையே தரும். உண்மையில், தமிழ்மக்களுக்கு இந்த விடயத்தில் கவலை இருக்கிறது. அப்படியிருக்க போராட்டத்துக்கு அழைப்பவர்கள் வெளிப்படையாக முன்வந்து துணிச்சலுடன் அதனை முன்னெடுக்க வேண்டும். அவர்களின் பயம் நியாயமானதுதான். ஆனால், அந்த முயற்சி நீண்ட கால அளவில் வெற்றியை தருமா என்பது சந்தேகமே.

இங்குள்ள தமிழர் பொது அமைப்புக்கள் பலவற்றுக்கு ஆளுனர் விவகாரத்தில் விசனம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அவர்கள் வாய் மூடி இருப்பது மக்களை அனாமதேயங்களின் பின்பாகச் செல்ல நிர்ப்பந்திக்கிறது. முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களில் ஃபேக் ஐடிக்களை நம்பி பின் தொடர விளைபவர்களின் நிலைதான் இதுவும். அதுமாத்திரமல்ல, அனாமதேயங்களை தொடரும் போக்கு தவறான வழிக்கே இட்டுச் செல்லும். கட்டுப்பாடற்ற போராட்டமாக அது வழி தவறிப்போகும் நிலை ஏற்படலாம்.

இங்கு நான் எழுதுகின்ற இந்த விடயங்கள் இங்கு நான் விமர்சித்த அனைத்துத் தரப்புக்குமே கசப்பாக இருக்கலாம். ஆனால், இதனைச் என்னால் சொல்லாமல் செய்தியிடலை செய்ய முடியவில்லை. மக்கள் முன்பாக ‘ஹர்த்தால் பூரண வெற்றி’ என்று என்னால் சொல்ல முடியவில்லை. எனது நீண்டகால நண்பரான ஹிஸ்புல்லாவின் அரசியல் குறித்த விமர்சனத்தை தவிர்க்க முடியவில்லை. அவர் இந்த விமர்சனத்தை சாதகமாக எடுத்து நடவடிக்கை எடுக்க முயல வேண்டும். தமிழர்கள் தன்னை நம்பும் நிலையை ஏற்படுத்தி, உதாரண அரசியல்வாதியாக செயற்படவேண்டும். தமிழர்களின், கிழக்குத் தமிழர்களின் கட்சிகளாக தம்மை கூறுபவர்கள் மேலும் பொறுப்போடு நடக்க முயல வேண்டும். விடய ஆர்வம் இருந்தும் ஏதோ காரணத்துக்காக அனாமதேயமாக போராட்டங்களை முன்னெடுப்பவர்கள்கூட முறைப்படி களத்துக்கு வரவேண்டும். அனாமதேயங்களை மக்கள் தொடர்ந்து நம்பமாட்டார்கள். அவை பாதக விளைவுகளுக்கு வழி செய்துவிடும்.

மொத்தத்தில் இன ஐக்கியம் உடையவோ, ஒரு இனம் மாத்திரம் பாதிக்கப்படவோ இடம் தந்துவிடாதீர்கள்.




பட்டதாரியானார். தொடர்ந்து தனது குருத்துவ, துறவற உருவாக்கத்தினை பெற்று வருகின்ற வேளையில்தான் இலங்கையில் இயேசு சபையினர் பணியாற்றுகின்ற திருகோணமலை மறைமாவட்டத்தை நிர்வகிக்கின்ற பொறுப்பு நியு ஓர்லியன்ஸ் மாநிலத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதுவரையிலும் அப்பொறுப்பினை பிரான்ஸ் நாட்டு சம்பேன் மாநில இயேசு சபையினர் நிர்வகித்து வந்தனர். இரண்டு உலகப் போர்களினாலும் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரான்ஸ் நாட்டு இயேசு சபையினரால் தொடர்ந்தும் இப்பணியினை முன்னெடுக்க முடியாமற் போய்விட்டது.



மட்டக்களப்பில் கழித்துவிடுவதென தீர்மானித்தேன்' என்கிறார். அத்தீர்மானமே அவரை இன்னும் அதிகமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்;ட அப்பாவி மக்களுக்காக குரல்கொடுக்கத் தூண்டியது எனலாம். தனது பணிக்காலத்தில் சமூகசேவைக்கு முன்னுரிமை அளித்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், ரோட்டரிக் கழகம், புற்றுநோயாளர்கள் சங்கம் போன்றவற்றில் தன்னையும் ஒருவராக இணைத்துக்கொண்டு பணியாற்றினார். இலங்கையில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தத்தினை கண்காணிப்பதற்காக

# அருட்பணி பெஞ்சமின் கென்றி மில்லர் - இயேசு சபை

மேற்கத்தைய துறவிகளின் வருகையானது இலங்கையில் கிறிஸ்தவ சமயத்தை அறிவிப்பதிலும், நிலை நிறுத்தியதிலும் நிலையான பங்கினை ஆற்றியுள்ளது என்றால் மிகையல்ல. அவ்வரிசையில் இலங்கைத் திருநாட்டில் கத்தோலிக்க நெறியினை போர்த்துக்கேயர் மற்றும் ஆங்கிலேயரது ஆட்சியின்போதும் அதனைத்தொடர்ந்த சுதந்திர இலங்கையிலும் வளர்த்தெடுப்பதில் இயேசுசபைத் துறவியர்கள் கணிசமான பணியினை ஆற்றியுள்ளார்கள். ஆங்கிலேயர் காலத்தில் பிரான்ஸ் தேசத்து சம்பேன் மாநில இயேசு சபையினரும், சுதந்திர இலங்கையில் அமெரிக்க நாட்டு நியு ஓர்லியன்ஸ் மாநில இயேசுசபையினரும் பணியாற்றியுள்ளனர். இவ்மறைப்பணியாளர்கள் இலங்கையின் திருகோணமலை (திருகோணமலை – மட்டக்களப்பு) மறைமாவட்டத்தை தங்களது பொறுப்பில் ஏற்றுக்கொண்டு மறைப்பணி, அறப்பணி, கல்விப்பணியென பல்வேறு நிலைகளில் பணியாற்றினார்கள். அவ்வாறு சுதந்திர இலங்கையில் மறைப்பணியாற்ற வருகைதந்த அமெரிக்கத் துறவிதான் 'ஹரி' மில்லர் என அறியப்படுகின்ற அருட்பணி பெஞ்சமின் கென்றி மில்லர் ஆவார்.



### யார் இந்த 'ஹரி' மில்லர் ?

ஐக்கிய அமெரிக்காவின் லூசியானா மாநிலத்தில் 11.08.1925ஆம் ஆண்டில் பிறந்தார். இவரோடு கூடவே மொத்தமாக ஏழு சகோதர, சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில், ஒரு சகோதரியினைத்தவிர ஏனையவர்கள் துறவற, குருத்துவ வாழ்வினை நாடினர். அவரது வீட்டில் ஒருவர் மாத்திரம்தான் வெள்ளாடு மற்றவர்கள் துறவற கருப்பு அங்கியினை அணிந்து கொண்டமையினால் கறுப்பு ஆடுகளாக வர்ணிக்கப்பட்டனர். ஒரு குருவாக வருவதற்காக தமது பதினாறாவது வயதில் அமெரிக்காவின் நியு ஓர்லியன்ஸ் மாநில இயேசுசபையில் இணைந்து கொண்டார். அவ்வாறு இணைந்து கொண்டவர் கல்லூரிக் கற்கையில் இயற்பியல் கற்று

இத்தருணத்தில்தான் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு சற்று முன்னதாக 1946ஆம் ஆண்டு இப்பணியானது நியு ஓர்லியன்ஸ் (அமெரிக்கா) மாநிலத்திந் இயேசு சபையால் பொறுப்பெடுக்கப்பட்டது. அவ்வாறு பொறுப்பெடுக்கப்பட்ட பணியினூடாக இலங்கைக்கு 1948ஆம் ஆண்டில் வருகைதந்த ஐந்து பேரில் ஒரு குருத்துவ, துறவற அருட்சகோதரராக 'ஹரி' மில்லர்

மட்டக்களப்புக்கு வந்தார். அன்று முதல் அவரது வாழ்க்கை இறக்கும் வரையிலும் கடந்து எழுபது ஆண்டுகளாக மட்டக்களப்பு மண்ணோடு இரண்டறக் கலந்துவிட்டது.

### மட்டக்களப்பில் மில்லர்

ஒரு குருத்துவ, துறவற மாணவனாக மட்டக்களப்பில் அடியெடுத்துவைத்த அருட்தந்தை மில்லர் அடிகளார் தனது குருத்துவ உருவாக்கத்தினை இலங்கையிலும், இந்தியாவிலும் பூர்த்தி செய்துவிட்டு 24.03.1954ஆம் ஆண்டில் ஓர் இயேசுசபைக் குருவாக நிருநிலைப்படுத்தப்பட்டார். இளம் குருவாக மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் தனது பணியினை ஆரம்பித்த அடிகளார் கல்லூரியில் இயற்பியல், வரலாறு மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களின் போதனாசிரியராக செயற்பட்டார். அது மட்டுமல்லாது கல்லூரியின் கால்பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டார். அவரால் உருவாக்கப்பட்ட அணியில் தமிழரும், முஸ்லீமும் முன்னிலை வீரர்களாக விளையாட, பறங்கியர் மையநிலை வீரர்களாக விளையாட, சிங்களவர்கள் ஆடுகள வீரர்களாக விளையாடினார்கள் என்பது சிறப்பாகும். அதனைத்தொடர்ந்து புகழ்மிக்க புனித மிக்கேல் கல்லூரியின் அதிபராக 1959 – 1970கள் வரையிலும் பணியாற்றினார். இவரே புனித மிக்கேல் கல்லூரியின் இறுதி இயேசுசபை அதிபரும், புனித மிக்கேல் கல்லூரி தனியார் பாடசாலையாக இயங்கியபோது பதவியிலிருந்த கடைசி அதிபருமாவார். 1973ஆம் ஆண்டு புனித மிக்கேல் கல்லூரி அரசிடம் ஒப்படைக்கப்பட்டபோது அதனைத் தாங்கமுடியாது கண்ணீர்விட்டு அழுதார் என்று அருட்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளார் சொல்வார்.

மறுபக்கத்தில் கல்விப்பணியுடன் இணைந்து ஆன்மீகப் பணியிலும் அருட்தந்தையவர்கள் தன்னை இணைத்துக் கொண்டார். தாழங்குடா பங்கின் பங்குத் தந்தையாகப் பணியாற்றி எழுவான் மற்றும் படுவான்கரையின் கிராமங்கள் எல்லாம் தனது மறைப்பணி மற்றும் அறப்பணியால் மக்களின் துயர்துடைத்தார்.

### அடிகளாரின் சிறப்புப்பணி

வடக்கு, கிழக்கு மாகாணங்களை போரின் கருமேகங்கள் சூழ்ந்துகொண்டபோது மக்கள் ஆயனில்லாத ஆடுகள்போல் தத்தளித்தனர். அவ்வேளையில் கிழக்கில் உதயசூரியனாய் உதித்து மக்கள் சேவையே மகேசன் சேவையென தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தார். எண்பதுகளின் ஆரம்பத்தில் மட்டக்களப்பில் சர்வமதத் தலைவர்களைக்கொண்டு சர்வசமய அமைப்பினை உருவாக்கி சமய நல்லிணக்கத்தையும், இணைந்து செயற்படுகின்ற செயற்பாட்டிற்கும் முன்னுரிமை வழங்கினார். பின்னர் போரின் அகோரம் அதிகரித்த வேளையில் மக்களின் துயர் துடைப்பு பணியில் ஈடுபடுவதற்காக மட்டக்களப்பு சமாதானக் குழுவினை உருவாக்கினார். அன்றைய ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் ஆலோசனைக்கமைய அதன் ஆரம்பத் தலைவராகவும் செயற்பட்டார். அக்கால கட்டத்தில் போரினாலும், இராணுவ கெடுபிடிகளினாலும் அதிகம் பாதிக்கப்பட்ட கிராமப்புற மக்களின் துயர் துடைக்க துரிதமாக செயற்பட்ட வீரகாவியமே அருட்தந்தை மில்லர் அடிகளார். சிவில் யுத்த காலத்தில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட மனித உரிமைகள் மீறல் சம்பங்கள், காணமல் ஆக்கப்பட்டோர் போன்றவர்களின் விபரங்களை தானாகவே தேடி விபரங்களை திரட்டிக்கொண்டார். பாதுகாப்புப் படையினரின் முகாம்களுக்கும், அவ்வப்போது விடுதலைப் புலிகளின் முகாம்களுக்கும் சென்று மக்களுக்கான நீதிக்காக குரல்கொடுத்தார்.

அநீத அமைப்புக்களால் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தவரின் விடுதலைக்காகப் குரல்கொடுத்தார். தனது பணியினைக் குறித்து அவர் குறிப்பிடுகையில் 'இயேசுசபையினரின் சார்பாக என்னால் செய்ய முடிந்தெல்லாம் யாதெனில், இங்குள்ள மக்களுக்கு என்னதேவை என்பதனை படம்பிடித்துக் காட்ட முடிந்தது' என்கிறார்.

1990களில் தன்னோடு கூடவே மட்டக்களப்பிற்கு மறைப்பணியாளராக வருகைதந்த மட்டக்களப்பு உள்ளவரை நினைவுகூரப்படும் நாமாகிய மறைக்கப்பட்ட அருட்பணி யூஜின் ஹேபர்ட் அடிகளாரின் மறைவினால் பெரிதும் பாதிக்கப்பட்ட அருட்தந்தையவர்கள் 'அந்நேரத்தில் நானும்கூட திரும்பிச் சென்றுவிடலாம் என எண்ணினேன், ஆயினும் மறுகணமே என் வாழ்நாள் முழுவதும் இங்கேயே

ஏற்படுத்தப்பட்ட இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க பிரதிநிதியாகவும் 2002ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டு பணியாற்றினார். இலங்கையில் போர் நிறைவுக்கு வந்த 2009ஆம் ஆண்டில் தனது சொந்த நாடாகிய அமெரிக்காவிற்கு திரும்பிச்செல்ல விரும்பி அங்கு சென்ற அடிகளார் வெறும் ஆறே மாதங்களில் எனது தேசம் அமெரிக்கா அல்ல மாறாக மட்டக்களப்பேயென நிரந்தரமாகவே இங்கு திரும்பி வந்துவிட்டார். இவ்வாறு தன் வாழ்நாளின் ஏழு தசாப்த காலத்தை மட்டக்களப்பு மண்ணில் கழித்து நம்மிடமிருந்து அருட்தந்தையவர்கள் விடைபெற்றுள்ளார்கள்.

அருட்பணி அ. அ.
நவரெத்தினம் – நவாஜி
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### நிறைவாக

தனது பணிக்காலத்தில் குருவானவராக, துறவியாக, பங்குத்தந்தையாக, கல்வியாளராக, கல்லூரியின் அதிபராக, விளையாட்டுப் பயிற்றுனராக, தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனராக, கட்டிடக் கலைஞராக, தோட்டத்தின் நிர்வாகியாக, நிதியாளராக, மேலாளராக, மக்களின் பாதுகாவலராக, மனித உரிமைகள் செயற்பாட்டாளராக, நீதியின் வேந்தராக, அப்பாவிகளின் கைது மற்றும் காணமற்போனோரின் சாட்சியாளராக பல்பரிமாணப் பணியினை நம்மத்தியில் அருட்தந்தையவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

அவரது பணி காலத்தால் அழியாதது. அவரது பணிக்காக கிழக்குப் பல்கலைக்கழகத்தால் கௌரவக் கலாநிதி பட்டமும், 2014ஆம் ஆண்டில் இலங்கை சமாதானப் பேரவையால் 'சமாதானத்திற்கான பிரஜைகள்' விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இத்தகைய விருதுகளுக்கு அவர் தகுதியுடைத்தவராயினும் அவர் எப்போதுமே விளம்பரத்தை விரும்பாதவர். அதற்கு பின்னால் செல்பவரும் அல்ல. தனக்கென தனியான பாதையை அமைத்து அதிலே பயணிப்பவரே அருட்தந்தை பெஞ்சமின் ஹென்றி மில்லர் அடிகளார். அவரது உடல் மண்ணுக்குள் புதைக்கப்பட்டாலும் அவரது பணிகள் எம்மத்தியில் என்றும் நீக்கமற நிலைத்து நிற்கும் என திண்ணமாய் நம்பலாம்.

# வரலாற்றில் மறக்கப்பட்ட / மறைக்கப்பட்ட பெண் திருமதி இ.ஆர்.தம்பிமுத்து

## பெண்கள் வாக்குரிமைக்கு உதவிய மட்டுநகர் பெண்மணி




1924ம் ஆண்டு சட்ட நிருபணசபைக்கு மட்டக்களப்பிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட இ.ஆர்.தம்பிமுத்துவின் மனைவியே திருமதி தம்பிமுத்தாகும்.

இன்று பெண்ணிலைவாதச் சிந்தனைகள், பெண்ணிலைவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் காரணமாக பெண்கள் அரசியலில் பங்குபற்றல், பாராளுமன்றத்தில், உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவ அதிகரிப்பு என அரசியலில் பெண்கள் பங்குகொள்ள வேண்டும் என்ற முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய சூழலுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழலில் அதாவது படித்த சொத்துள்ள உயர்வர்க்க ஆண்கள் அரசியலில் பங்கு பற்றி எல்லாருடைய நலன்களையும் தீர்மானிக்கின்றவர்களாக இருந்த சூழலில், பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கு வேண்டிய அடிப்படை உரிமையாகிய வாக்குரிமைக்காக, பல்வேறுபட்ட ஆண்மையவாத அரசியல் அமைப்புக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் 'பெண்கள் வாக்குரிமைச் சபை' என ஒன்றை அமைத்து பெண்களின் வாக்குரிமைக்காக குரல்கொடுத்து இலங்கையில் ஆண்களுக்குச் சமனாக பெண்களும் வாக்குரிமையினை பயன்படுத்துவதற்கான உரிமையினை பெற்றுத்தந்தவர்களாக திருமதி இ.ஆர்.தம்பிமுத்து அவர்களும் திருமதி சி.இ.த.சில்வா அவர்களும் விளங்குகின்றனர்.

1924ல் அறிமுகப்படுத்தப்பட்ட மானிங் அரசியல் சீர்திருத்தம் இலங்கையர்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை என எழுந்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து பிரித்தானிய அரசு, இலங்கைக்குப் பொருத்தமான அரசியல் திட்டமொன்றை வரைந்து அமுல்படுத்துவதற்காக 1927ம் ஆண்டு டொனமூரின் தலைமையில் ஒரு ஆணைக்குழுவை இலங்கைக்கு அனுப்பிவைத்தது. அவ் ஆணைக்குழு 'டொனமூர் ஆணைக்குழு' என அழைக்கப்பட்டது. இவ் ஆணைக் குழுவினர் 1927ம் ஆண்டு நவம்பரில் இலங்கை வந்து இலங்கையிலுள்ள பல்வேறு வகைப்பட்ட பிரதிநிதிகளையும் குழுக்களையும் சந்தித்து கலந்துரையாடினர். இப்பிரதிநிதிகளாலும் குழுக்களாலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அவர்களுடைய நேரடி அவதானிப்பையும் அடிப்படையாகக் கொண்டு 1931ம் ஆண்டு அரசியல் சீர்திருத்தத்தினை முன்வைத்தனர். இது 'டொனமூர் அசியல் திட்டம்' என அழைக்கப்பட்டது.

இவ்வரசியல் திட்டத்தின் முக்கியமான அம்சம் சர்வசன வாக்குரிமையாகும். அதாவது அதுவரைகாலம் இருந்த கல்வி, சொத்து, என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட வாக்குரிமையினை நீக்கி 21 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கியமையாகும்.

இந்த சர்வசனவாக்குரிமை வழங்குவதற்கு அடிப்படையாக அமைந்தவர்கள்தான் மேலே குறிப்பிட்ட இரு பெண்மணிகளும் அவர்களுடைய சபை உறுப்பினர்களுமாவார்கள். இவர்கள் டொனமூர் ஆணைக்குழுவினரை 1928 ஜனவரி 14 இல் சந்தித்து பெண்களுக்கான வாக்குரிமையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியிருந்தனர்.

இவர்கள் தனியே ஆண், பெண் சமத்துவம் என்பதற்கும் அப்பால் ஏன் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை பின்வரும் காரணங்களை முன்வைத்து எடுத்துக்காட்டியிருந்தனர்.

1. இலங்கையில் குழந்தை இறப்பு உயிர் விகிதம்
2. வீடமைப்பில் சீர்திருத்தத் தேவை
3. குழந்தை நலம்
4. மருத்துவம்
5. கர்ப்பிணிகளுக்கான உதவி

மேலுள்ள ஐந்து காரணங்களும் பொதுவான மனிதகுல விருத்தியின் அடிப்படைத் தேவைகளாக இருக்கின்றன. ஆண்கள், அதிகாரமும் பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்புப் பற்றி சிந்தித்து கோரிக்கைகளை முன்வைத்துக் கொண்டிருக்க, பெண்கள் பொதுவான மனிதகுல அடிப்படைத் தேவைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தமை பெண்களால்த்தான் இவ்வாறு சிந்திக்க முடிகின்றது என்பதை உறுதிசெய்வதாக இருக்கின்றது. அத்துடன் இவ் ஐந்து கோரிக்கைகளையும் ஒரு அரசியல் தேவைப்பாடாக எடுத்துக்காட்டியுள்ளதில் இருந்து இப் பெண்கள் அரசியலையும் சமூகவிருத்தியையும் எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்ததாக நோக்கியுள்ளார்கள் எனும் அவர்களின் தூர நோக்கான அரசியல் பார்வையையும் இது தெளிவுபடுத்துகின்றது.

டொனமூர் ஆணைக்குழுவினர் இப் பெண்களின் கோரிக்கையினை சாதகமாக அணுகினர் என்பதை அவர்களுடைய அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் இதுபற்றி பின்வருமாறு அறிக்கை செய்துள்ளனர், ' பெண்கள் வாக்குரிமை பற்றிய கேள்வியை நாம் கருத்துடன் ஆராய்ந்துள்ளோம். அவர்கள் சார்பில் எடுத்துக் கூறப்படும் வழக்கமான வாதங்கள், ஆண் பெண் சமத்துவம் ஆகியவற்றைத் தவிர, இலங்கையில் குழந்தை இறப்பு உயிர் விகிதம், வீடமைப்பில் சீர்திருத்தத் தேவை, குழந்தை நலம், மருத்துவம், கர்ப்பிணிகட்கான உதவி ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்கப்பட வேண்டிய தேவை ஆகியன எம்மைக் கவர்ந்தன. இச் சிக்கல்கள் யாவற்றையும் தீர்ப்பதில் பெண்களின் ஆர்வமும் உதவியும் மிகுந்த பயனளிக்கும்' என அவர்கள் இப் பெண்களுடைய கருத்தினைச் சார்ந்து சிந்தித்துள்ளார்கள்.

ஆயினும் அப்போதைய ஆண்மையவாத அதிகாரத்துவ அரசியல் தலைவர்கள் இந்த சமூகநல அரசியலை அல்லது இவர்களுடைய கோரிக்கையின் நியாயப்பாட்டினை கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

கலாநிதி. சு. சிவரெத்தினம்

சேர்.பொன்.இராமநாதன் போன்ற தலைவர்கள்; வெள்ளாளரல்லாத சாதியினருக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை அளிப்பது கும்பலாட்சிக்கு வழிவகுக்கும் ஒரு பாரிய பிழையென்றும் அவ்வாறு வாக்குரிமை வழங்குவது இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்றும் நம்பினர், வாதிட்டனர். ஏ.ஈ.குணசிங்காவினைத் தவிர வேறெந்தத் தலைவர்களும் சர்வசன வாக்குரிமை வேண்டுமென்று வாதிடவில்லை. இது போல மிக முக்கியமான அரசியல் செயற்பாட்டில் இருந்த இலங்கை தேசிய காங்கிரஸ், தமிழர் மகாஜன சபை, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், மற்றும் இடது சாரிச் சிந்தனையாளர்கள் என எவருமே சர்வசன வாக்குரிமைக்கு அல்லது பெண்கள் வாக்குரிமைக்கு சார்பாக குரல்கொடுத்ததாக பதிவுகள் எதுவும் இல்லை. இவ்வாறு இவர்கள் மௌனமாக இருந்தது அல்லது சர்வசன வாக்குரிமை வேண்டாம் என எதிர்த்தற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவது இருந்திருக்கலாம்.

சர்வசனவாக்குரிமையுடன் கூடிய வேறுபல திருத்தங்களுடன் இவ்வரசியல் திட்டம் சட்டநிருபணசபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஒரு வாக்கினால் இவ்வரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அவ் ஒரு வாக்கினை திருமதி.தம்பிமுத்துவின் கணவர் இ.ஆர். தம்பிமுத்து அவர்களே அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் ஆதரவாக வாக்களித்ததில் திருமதி தம்பிமுத்துவின் செல்வாக்கு இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் டொனமூர் அரசியல் திட்டத்தினை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் நிராகரித்தும் சேர்.பொன். இராமநாதன், ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற தமிழ் தலைவர்கள் அனைவரும் அதற்கு எதிராக வாக்களித்த சூழலில் திரு.இ.ஆர்.தம்பிமுத்து மாத்திரம் அதற்கு ஆதரவாக வாக்களித்ததிலிருந்து இதனை விளங்கிக்கொள்ளமுடியும்.

எனவே திருமதி.தம்பிமுத்து அவர்கள் பெண்களுக்கான வாக்குரிமை விடயத்தில் இனம், மதம், சாதி, பிரதேசம், என்பவற்றுக்கப்பால் சிந்தித்து மனிதகுல விருத்திக்கு பெண்களின் அரசியல் பங்கு பற்றல் அவசியம் என்ற ஒரு திடமான கொள்கையுடன் இருந்திருக்கிறார். அவருடைய அக்கால அரசியல் சூழலில் இப்பணி மிகப் புரட்சிகரமான ஒன்றேயாகும். இன்று ஒவ்வொரு பெண்களும் தாங்கள் வாக்களிக்கின்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் இவ்விரு பெண்களையும் நினைவுகூர்வது அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

இவ்வாறு பெண்களின் அரசியல் உரிமைக்காக உழைத்தவரை இன்றைய பெண்ணிலைவாதிகள், பெண்நிலைவாத அமைப்புக்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது துரதிஸ்டவசமானதாகும். வரலாற்றில் பெண்களின் வகிபாகத்தை ஆண்மையவாத வரலாற்று எழுத்தியல் மறைத்துள்ளது என்ற பரவலான கருத்துண்டு, இவ்வாறு மறைக்கப்பட்ட பெண் ஆளுமைகளை அடையாளப்படுத்துவதும் அவர்களை மீள்வாசிப்பதும் அவர்களுடைய பணியின் முக்கியத்துவத்தினை இளைய சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவதும் இன்றைய நடுநிலையான வரலாற்று ஆய்வாளர்களின் கடமையாகும். இலங்கை பெண்களின் வாக்குரிமைக்காக உழைத்த திருமதி.இ.ஆர். தம்பிமுத்து அவர்களை மட்டக்களப்பு சமூகம் இனிவரும் காலங்களிலாவது நினைவுகொள்ள வேண்டும். இந்தப் பணியினைச் செய்வதற்கு மட்டக்களப்பு அரசியல்வாதிகளும் பெண்நிலைவாதிகளும் முன்வருதல் வேண்டும்.

31ஆம் நாள் நினைவு அஞ்சலி
15.01.2019

மலர்வு
14
08
1951



உதிர்வு
16
12
2018

தெய்வத்திரு. குருசாமி புகழேந்திரன்

# பொங்கல் விழா -- தோற்றமும் வளர்ச்சியும்



குதிரைமலையை ஈண்ட பிட்டங் கொற்றன் எனும் குறுநில மன்னனின் கொடைச்சிறப்பைப் பாடவந்த கருவூர்கதப்பிள்ளை சாத்தனார் எனும் புலவர் குறிஞ்சித் தமிழர் கொண்டாடிய புதிது உண்ணும் பொங்கல் விழா பற்றிய குறிப்புகளையும் பதிவு செய்துள்ளார்.

அருவி ஆர்க்கும் கழைபயில் நனந்தலைக்

கறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தாள்

கொழுங்கிழங்குமிளிரக் கிண்டி கிளையோடு

கடுங் கண் கேழல் உழுத பூமி

நன்னாள் வருபதம் நோக்கி குறவர்

உழா அது வித்திய பரூஉக் குரல் சிறுதினை

முந்துவிளை யாணர் நாள் புதிது உண்மார்

மரை ஆன் கறந்த நுரை கொள் தீம்பால்

மான் தடி புழுக்கிய புலவு நாறு குழிசி

வான் கேழ் இரும் புடைக் கழாஅது ஏற்றி

சாந்த விறகின் உதவித்த புன்கம்

கூதளம் கவினிய குளவி முன்றில்

செழுங்கோள் வாழை அகல் இலைப்பகுக்கும்.

பண்டைத்தமிழரின் வாழ்வியல் வளர்ச்சி "மலையும் மலை சார்ந்த இடமுமாகிய" குறிஞ்சி நிலத்தையொட்டியதாகவே தொடங்கிற்று. மனித இனம் காட்டுமிராண்டி நிலையிலிருந்து விடுபட்டு சிறு சிறு குழுக்களாக வேட்டையாடுதலையே தொழிலாக கொண்டு வாழ்ந்த, சமூகவாழ்க்கை போல குறிஞ்சி நில வாழ்க்கை ஆகும். இம்மக்களின் குடியிருப்புகள் சிறுகுடி எனப் பெற்றது. உழவுத்தொழில் அப்போது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. குறிஞ்சி நிலத்தமிழர்களின் தொழிலாக வேட்டையாடுதல், தேன் எடுத்தல் வள்ளி முதலிய கிழங்குகளை அகழ்தல் என்பனவே விளங்கின.

புதிதுண்ணும் பொங்கல் நிகழ்வு குறிஞ்சி நில வாழ்க்கையிலேயே தமிழர்களிடையே நிகழத்தொடங்கியது. இதற்குச் சான்றாக சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானுற்றின் 168ம் பாடலில்

அருவிகள் ஆர்ப்பரிக்கும் மூங்கில் மரங்கள் நிறைந்த மிளகுக் கொடிகள் வளர்ந்த நில அடுக்குகளில் வளர்ந்த காந்வதன் கிழங்குகள் உண்பதற்காக வலிமைமிக்க காட்டுப்பன்றிகள்(கடுங்கண் கேழல்) கூட்டமாக வந்து நிலத்தைக்கிளறி, உழுத புழுதியில் மலைவாழ் மக்கள் தாங்கள் கொண்டாடும் நன்னாளன்று அறுவடைக்கு வரும் வண்ணம் தினையை விதைத்தனர். அது பெரிய தோகையினையுடைய சிறுதினைப் பயிராக முற்றி அவர்கள் எதிர்பார்த்த நாளுக்கு முன்பே விளைந்தது. (யாணார் புதுவருவாய்) அதனை அறுவடை செய்து அவர்கள் எதிர்பார்த்த நன்னாளன்று புதிது உண்ணுதல். (புதிது உண்மார்) வேண்டி கூதாளிச்செடிகளும் மலை மல்லிகையும் படர்ந்து வளர்ந்திருக்கும் இல்லத்து வாசலில் பெரிய மான்கறி சமைத்து உண்ணும் மிடாவில் காட்டுப் பசுவிடம் கறந்த நுரைகொள் தீம்பாலை உரையாக ஏற்றி விளைந்த திணையை சந்தன விறகுகளைக் கொண்டு பொங்கி அப்பொங்கலைச் செழுமையான வாழை இலைகளில் பகுத்து உறவுகளோடு உண்டனர் என்பது இப்பாடலின் பொருள் தரும் செய்தியாகும்.

பொங்கலை அன்று புன்கம் என்றனர்.

புல்லை ஊற்றிய தினைப்பொங்கலில் தேனை ஊற்றிக்கலந்து உண்டனர்

**செங்கதிரோன்**

என்ற செய்தியும் பால் பெய் புன்னகம் தேனொடு மயக்கி என வேறொரு புறநானூற்றுப்பாடலில் (புறம்.34) பதிவாகியுள்ளது. மேலும் தாவரவியலாளர் கூற்றுப்படி பழங்காலத்தில் முதலாவதாக மனிதனால் பயிரிடப்பெற்ற தானிய உணவுவகை திணைதான் என்பதை மனங்கொள்ளும் போது தமிழர்தம் புதிது உண்ணும் பொங்கல் நிகழ்வின் தொன்மையையும் புரிந்து கொள்ள முடிகிறது. தினை உலகிலேயே அதிகம் பயிரிடப்படும் தானிய வகைகளில் இரண்டாவதாக இருக்கிறது. தினை உற்பத்தியில் சீனா முதலிடம் இந்தியா இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. தினை சீனாவில் கி.மு 6000 காலகட்டத்தில் பயிரிடப்படடு வந்ததாக அறியமுடிகிறது. இதனை வைத்து பார்க்கும்போது புதிது உண்ணும் பொங்கல் நிகழ்வு தமிழர்களின் வாழ்வியலில் எவ்வளவு தொன்மையானது என்பது தெரிகிறது.

உழத்தெரிந்திருக்காத அன்றைய குறிஞ்சி நில மக்கள் பன்றிகள் உழுத புழுதியில்தான் தினையை விதைத்து விளைவித்து அறுவடை செய்து ஒரு நன்னாளிலே அதனைப் பாலில் புதிதாகப் பொங்கி உண்டு மகிழ்ந்துள்ளனர்.

அன்றைய குறிஞ்சி நிலத்தமிழர்களின் தினைப்பொங்கல்தான் இன்று இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட எழுபத்தைந்திற்கும் மேற்பட்ட நாடுகளில் பரந்து வாழுகின்ற சுமார் பதின்மூன்று கோடித்தமிழர்களாலும் கொண்டாடப்படுகின்ற தமிழர் திருநாள் ஆன பொங்கல் விழாவின் தோற்றுவாய் ஆகும்.

காட்டு விலங்குகளை வேட்டையாடியும் தேன் எடுத்தும் வள்ளிக்கிழங்குகளை அகழ்ந்தும் உழவாமல் தினையை விதைத்தும் வாழ்ந்த குறிஞ்சி நிலத்தமிழர்கள் அக்காட்டு விலங்குகளைப் பிடித்து வீட்டு விலங்குகளாக மாற்றி மேய்ச்சல் தொழிலிலும் ஈடுபடும் சமுதாயமாக மாறிய வளர்ச்சிப்படியே

தொடர்ச்சி... (பக்கம் -15)



தமிழர் தாயகமெங்கிலும் போருக்குப் பின்பான பௌத்த பெருந்தேசியத்தின் ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரல் அவர்களின் அட்டவணைப்படி நடந்தேறியே வருகிறது. இராணுவ வலயங்களாக, பொருளாதார அபிவிருத்தி வலயங்களாக, சுற்றுலாத்துறை அபிவிருத்தி வலயங்களாக, வனப்பாதுகாப்பு வலயங்களாக, தொல்லியல் துறை

வரும் மக்களின் தலைகளிலே இன்னுமொரு பேரிடியாக இறங்கியிருக்கிறது இவ்விவகாரம். கூனித்தீவு மத்தளை மலை விவகாரம், செம்பிமலை விவகாரம் போன்று கந்தசுவாமி மலை விவகாரமும் மிகத் தீவிரமாக கையாளப்பட வேண்டிய ஆக்கிரமிப்பு வடிவம் தான். அங்கெல்லாம் மக்கள் திரள் ஆதரவு கிடைத்தது போல

இம்மலையை தமிழர்களின் வசம் விட்டுக் கொடுப்பதனூடாக தமது தொழில் வாய்ப்புக்கள் கைநழுவும் வாய்ப்புக்கள் இருப்பதை உணர்ந்த சிங்களவர்களின் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலே கந்தசுவாமி மலை விவகாரமாகும்.

ஆனால் இது இவ்வாறிருக்கையில் மலையடிவாரத்தில் புதிதாக

இவ்விடயம் தொடர்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றைச் செய்வதற்கான முன்னெடுப்பொன்றை மக்கள் தன்னிச்சையாக மேற்கொண்ட போது பிரதேசத்திற்குப் பொறுப்பான காவல்துறை அதிகாரியினால் அவ்விடத்தில் புத்தர் சிலை எதுவும் நிறுவப்படாது என மக்களிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அவ்விதம் ஏதாவது புத்தர் கோவில்

# தென்னன் மரபு அடி கந்தசுவாமி மலை- பௌத்த பெருந்தேசியத்தின் இன்னுமொரு ஆக்கிரமிப்பு

## அரசுக்கு புரியும் மொழியில் தமிழர் அரசியல் தலைமை பேச வேண்டும்






வலயங்களாக தமிழர் தாயகப் பூமி கூறாக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கையகப்படுத்தல்களை வெறுமனே ஒரு அரசின் நடைமுறைசார் வேலைத்திட்டமாக சிங்களம் வெளிக்காட்டி நிற்கிறது. ஆனால் அதன் உண்மைத்தன்மை பற்றி சிந்தனைச் சமூகம் அறியும். தமிழர் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டமாக ஏதேனும் ஒரு விதத்திலாவது சிங்களம் விட்டுக் கொடுப்பொன்றை மேற்கொள்ளும் போது அது சற்றேறக்குறைய 13இன் திருத்திய வடிவமாக இருப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

அதிலும் குறிப்பாக காணி அதிகாரம் வழங்குதல் பற்றி தீவிரமான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தப் பின்னணியில் தான் தமிழர் தாயகத்தின் நிலங்கள் கையகப்படுத்தப்படுவதனை நாம் உற்று நோக்குதல் வேண்டும். மத்திய அரசின் கீழ் மிக முக்கியமான நிலப் பகுதிகள் அனைத்தும் பெற்றுக் கொள்ளப்பட்டபின்பு வெறுமனே எஞ்சிய சிறுபகுதி நிலங்களே தமிழரின் அதிகாரப்பரப்பிற்குள் வந்து சேரும். இவ்வகையான சூழ்ச்சி வலைப் பின்னலை கத்துக் குட்டிகளும் இனங்கண்டு கொள்ளும். ஆனால் தமிழ்த் தேசிய தேர்தல் அரசியல் சக்திகள் இவ்விடயங்கள் தொடர்பாக கரிசனையின்றி இருப்பது வேடிக்கையும் வேதனையுமாகும்.

கடந்த சில நாட்களாக திருமலையின் மிக முக்கிய பேசுபொருளாக தென்னன் மரபு அடி (தென்னமரபாடி) கிராம கந்தசுவாமி மலை மீதான ஆக்கிரமிப்பு முன்னிலைப்படுத்தப்படுகிறது. கடந்த வாரக் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட வகையில் சொல்லொணாத் துயரங்களுடன் மீளக்குடியேறி வாழ்ந்து

தென்னமரபாடியில் கிடைக்காது என்பது நமக் கெல்லாம் தெரிந்த விடயமே. மிகச் சிறு எண்ணிக்கையில் மக்கள் வாழும் செழிப்பான தமிழ்த் தாயக மண் சிங்களத்தின் சூழ்ச்சியின் கீழ் ஆக்கிரமிக்கப்படுவதை மௌனச் சாட்சிகளாக பார்த்துக் கொண்டிருக்கின்றனர் அப்பகுதி மக்கள்.

திருநாவுக்கரசு கோபகன்

கந்தசுவாமி மலை தமிழர்கள் தொன்று தொட்டு வழிபட்டு வந்த முருகக் கடவுளின் இருப்பிடமாகும். வடக்கிலிருந்து பாதயாத்திரையாக வெருகலூடாக கதிர்காமம் செல்லும் முருக பக்தர்கள் களைப்பாறவும் உணவு எடுக்கவுமாக இம்மலை முருகன் ஆலயம் விளங்கி வந்திருப்பதாக உள்ளூர் வாசிகள் தெரிவிக்கின்றனர். யுத்த இடம்பெயர்வின் போது கைவிடப்பட்ட மலைக் கோயிலில் இராணுவம் இருந்ததாக சொல்லப்படுகிறது. மீளக்குடியேறிய பின்பு இராணுவம் வெளியேறிய பின்பு மக்கள் சிதைந்து போயிருந்த கோவிலை மீளவும் வழிபாட்டிடமாக மாற்றியமைத்து வழிபட்டு வந்ததாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன் ஒரு பகுதியாக முருகன் சிலையொன்றை கொண்டு வந்து வைத்த போது இரவோடு இரவாக அது அடித்து சிதைக்கப்பட்டு, தூக்கி வீசப்பட்டிருந்தது. பின்பு சிலரின் அயராத உழைப்பினால் வேல் ஒன்றினைச் செய்து மலையில் நிறுவிய போதும் அதுவும் உடைத்து வீசப்பட்டது. இவை அத்தனைக்கும் பின்னணியில் அயற்கிராம புத்த பிக்குவும் சில சிங்கள விசமிகளுமே இருப்பதாக மக்கள் சந்தேகிக்கின்றனர்.

கந்தசுவாமி மலையின் பிற்பகுதியில் தொடங்கும் கடற்பகுதியை சிங்களவர்கள் ஆக்கிரமித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மலையின் அடிவாரத்தில் கடலுடன் இணையும் பகுதியில் அமைந்துள்ள கிணற்றையும் அவர்களே பாவித்து வருகின்றனர். இப்பகுதி முழுவதும் தமிழர்களுக்குச் சொந்தமான கடற்பாடுகளாகும். மீன்பிடித் தொழில் வளமாக நடைபெறும் இப்பகுதி மீளக் குடியேறிய மக்களின் கைகளை விட்டு ஆக்கிரமிப்புச் சிங்களவர்களின் கைகளில் இருக்கிறது.

அத்திவாரமொன்று போடப்பட்டிருப்பதை அவதானித்த மக்கள் இது விடயமாக வெளியே அறிவித்தனர். சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களே (Civil Security Division) இக்கட்டடத்தைக் கட்டிவருகின்றனர். அவர்களிடம் சென்று விசாரித்த போது தொல்லியல் துறையினரின் வேண்டுகோளின் பிரகாரமே இக்கட்டடம் அமையப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

அரச நிறுவனமொன்று தமக்குத் தேவையான கட்டடமொன்றினைக் கட்டும் போது பின்பற்ற வேண்டிய தாபனக் கோவை விதிகள் எதனையும் இங்கே முறையாகப் பிரயோகிக்கவில்லை என்பது தெட்டத் தெளிவு. கட்டடங்களைக் கட்டுவதற்கான முறையான அனுமதியொன்றை உள்ளூராட்சிசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை. கட்டடமொன்றை



அமைப்பதற்கான வேள்விப்பத்திரக் கோரல் நடைபெறவில்லை என்பன போன்ற நிறைய விடயங்கள் நடைபெறாத சூழலில் இக்கட்டமானது தொல்லியல் துறையினரால் எழுப்பப்படுகிறது என்கிற வாதம் ஏற்றுக் கொள்ள முடியாததாகிறது. இது தொடர்பாக கேள்வியெழுப்ப வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் வெறுமனே பேசாது இருக்கின்றனர். சில உள்ளூர் அரசியல் தலைமீடுகள் காரணமாக குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளரின் கட்டட அனுமதி பற்றிய அறிவுறுத்தல் அப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதும் அதனை கிழித்து எறிந்து விட்டு மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிறுவப்பட்டால் அதனை நான் தடுத்து நிறுத்துவேன் எனவும் தன்னை நம்புமாறும் மக்கள் கேட்டக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இது எங்கள் அப்பா குதிருக்குள் இல்லை என்பதாகத்தான் மக்களால் நோக்கப்படுகிறது. அரச கட்டடமொன்றை மக்கள் தடுக்க முனைந்தால் அதனை அரச நிறுவனம் சட்டத்தின் உதவியுடன் நிறுவ முடியும் என்பதனை அங்குள்ள சராசரி மக்களும் அறிவர்.

இது வெறுமனே ஒரு தமிழர் கோவிலின் மீதான ஆக்கிரமிப்பு அல்ல, மாறாக தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைத்து தேசியத்தின் பால் அவற்றிற்கிருக்கும் வகிபாகத்தை இல்லாதொழிப்பதனூடாக தேசியக் கட்டுமானத்திற்கான கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதேயாகும்.

இந்நிகழ்ச்சி நிரலின் பங்காளிகளாக உள்ளூர் பௌத்த பிக்கு தொடங்கி தொல்லியல் துறை வரையும் திட்டமிட்டு வலைவிரித்துக் காத்திருக்கிறார்கள். இவ்வகையான தொடர்ச்சியான ஆக்கிரமிப்புகளுக்கு பதிலிறுக்கும் முறையான பொறிமுறையொன்றை தமிழர் தரப்பு அரசியல் இலாபங்களைப் புறந்தள்ளிக் கண்டடைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ்த் தேசியத்தின் இருப்பென்பது எமது பண்பாட்டு அடையாளங்களைக் கட்டிக் காப்பாற்றுவதிலேயே தங்கியிருக்கின்றதென்பதனை தேர்தல் அரசியற் தலைமைகள் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

சிவில் சமூகங்களின் தீவிரமான மக்கள் அரசியல் பங்காற்றலும் இங்கு பெரிதும் தேவைப்படும் விடயமாகும். முறையாக அணிதிரட்டப்பட்ட மக்களரசியல் தளமொன்றினூடாக அரசின் காதுகளுக்கு கேட்கும் மொழியில் தமிழர் தரப்பு பதிலிறுக்க வேண்டும். இவற்றை தமிழர் சமூகம் உடனடியாகக் கண்டடைந்து பரீட்சித்துப் பார்த்தாக வேண்டும்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## படுவான்கரை மக்களுக்கு தையிலாவது வழிபிறக்குமா?

‘தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது நம்மிடையே கலந்துவிட்ட முதுமொழி. ஆனால் இன்றோ, படுவான்கரை மக்களின் வழிகள் பல அடைக்கப்பட்ட காலச்சூழல்களாக மாறியிருக்கின்றது.’ என தம்பிராசாவும், கணேசபிள்ளையும் புல்லுமலையில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

தமிழுக்கு தைபிறக்க மூன்று நாட்கள் மீதமிருந்த வேளையில் படுவான்கரை மக்கள் எதிர்பார்த்துள்ள எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலையை எட்டுமென தம்பிராசா கணேசபிள்ளையிடம் கூறினான். ஏன்தம்பிராசா அவ்வாறு கூறுகின்றான் என்பதை புரிந்துகொள்ள முடியாதவனாக கணேசபிள்ளை சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது காரணத்தை கூற ஆரம்பித்தான் தம்பிராசா.

நாட்டில் இடம்பெற்ற மூன்று தசாப்த யுத்தத்தினால், படுவான்கரை மக்களுக்கான கல்வி ஒழுங்குமுறையில் கிடைக்கவில்லை. பாடசாலைகள் இருந்தன. பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச் சென்றனர். ஆனால் ஆசிரியர் பற்றாக்குறையினாலும், ஆசிரியர்களின் வருகை குறைவினாலும் பாடங்கள் நடைபெறவில்லை. இதனால் பாடசாலையினை மட்டுமே நம்பியிருந்த படுவான்கரை மாணவர்கள் பரீட்சைகளில் பிரகாசிக்க முடியாதவர்களாக மாறினர். இதன் விளைவினால் இன்று குறைந்த அளவிலான அரச உத்தியோகத்தர்களைக்கொண்டு படுவான்கரைப்பிரதேசம் மற்றவர்களின் கைகளில் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனாலும் கிடைக்கின்ற வளத்தினைக்கொண்டு, மாவட்டத்திலே இங்குள்ள மாணவர்கள் வருடாந்தம் சாதித்துக்கொண்டிருக்கின்றனர்.

மக்கள் வரிப்பணத்தில் சம்பளமெடுத்து அதிகாரம் காட்டும், மக்களால்தான் ஊதியத்தினைப்பெறுகின்றோம் என்பதனை மறந்து ஆணவச்செருக்கு கொண்டு செயற்படும் ஒருசில அரச உத்தியோகத்தர்களால், ஒட்டுமொத்தமாக அவ்வாறே அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும் பார்க்கப்படுகின்ற நிலையில், அத்தொழிலை படுவான்கரை மக்கள் அதிகளவில் செய்யாவிட்டாலும், மற்றவர்கள் வாழ்வதற்காக தம்மை அர்ப்பணித்து மேற்கொள்ளும் விவசாயத்தொழிலையும், கூலித்தொழிலையும் செய்து அன்றாடம் வாழ்க்கையினை வழிநடத்துகின்றனர்.

படுவான்கரையெங்கும், நெற்செய்கையையும், மேட்டு நிலப்பயிர்செய்கையையுமே அதிகளவில் காணமுடியும். இத்தொழிலின் மூலம் தமது குடும்பத்தினை வழிநடத்திக்கொள்ள முடியும். என்ற எண்ணத்தில் கஸ்டங்களையும், கடன்களையும்பெற்று விவசாயத்தினை மேற்கொள்கின்றனர். இதன்மூலம் வீட்டுக்கு உணவுப்பொருட்கள் கிடைக்கும், இதனால் குறைவில்லாமல் வருடம் முழுவதும் உணவு உண்ணலாம் என்ற அனுபவ சிந்தனை இவர்களுடன் இணைந்தே உள்ளது. ஆனாலும் உற்பத்தியின் போது வருடாந்தம் இயற்கையின் பாதிப்புக்கு உள்ளாக நேரிடுவதும் அனுபவத்தின் மூலம் இப்பகுதிமக்கள் பெற்றுக்கொண்ட பாடமே. அவ்வாறுதான் இவ்வாண்டிற்கான மேட்டுநில பயிற்செய்கை அறுவடைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் விவசாயிகள் நினைத்ததை அடையமுடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால்தான் இப்பகுதிமக்கள் தைப்பிறப்பை வழிப்பிறப்பாக எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். சோளன் செய்கையின் போது படைப்புழுவின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. அதுபோல நெற்செய்கையிலும் அறக்கொட்டி நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்பார்த்த விளைவினை பெறமுடியாதவர்களாக உள்ளனர்.

கூலித்தொழிலும், விவசாயமுமே இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிகொடுத்துக்கொண்டிருக்கின்றன. யுத்தம் இந்த நாட்டிலே மௌனிக்கச்செய்யப்பட்டு ஒரு தசாப்தம் கடந்திருக்கின்ற நிலையிலும் கூட இம்மக்களுக்களின் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்பக்கூடிய தொழில்துறைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லையென்பதே வேதனையானது. குருவி சேகரிப்பது போன்று அன்றாடம் சேகரிக்கின்ற பணத்தினையும் நுண்கடன்களுக்கு கொடுத்துவிட்டு ஏமாற்றத்துடன் நிற்கின்றனர். இம்மக்களுக்களுக்கான வழியினை ஏற்படுத்த இப்பகுதியிலே தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு, இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்காமைப்படாமை கவலையானதொன்றே.

இப்பகுதி மக்களிடமிருந்து குறைந்த விலையிலும், மோசடி செய்தும் நெல்லினை பிற பிரதேசத்தினர் கொள்வனவு செய்து செல்கின்றனர். அதேபோன்று இங்கு உற்பத்தி செய்யப்படும் பால் உற்பத்திகளும் வேறுபிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதைத்தவிர்த்து இப்பகுதியிலே இதற்கான தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலமாக, மோசடியின்றி நெல்லினை இப்பகுதி மக்கள் வழங்கக்கூடியதாகவும், வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள கூடியவகையிலும் அமையும். இதனால் கடன்பட்டு வெளிநாடுகளுக்கு தொழிலுக்கு செல்கின்ற வீதத்தினையும் குறைக்க முடியும் என்று கூறினான் தம்பிராசா.

பிறக்கவிருக்கின்ற தையிலிருந்தாவது படுவான்கரை மக்களின் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வழிபிறப்பிக்கப்பட வேண்டும் என்பதே தம்பிராசாவின் எண்ணமுமாகும்.

**படுவான் பாலகன்**

## மதமாற்றங்களும் தமிழின அழிப்பும்



இலங்கைப் பேரினவாதத்தில் மட்டுமின்றி உலக வல்லாதிக்க நாடுகளிலும் கூட தமிழினத்தைக் குறிவைத்து அதன் மத, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை சிதைக்கும் நோக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டு பல்வேறு முயற்சிகள் அரங்கேற்றப்படுவதும் நாம் யாவரும் அறிந்த நிதர்சனமே. இம்முயற்சிகளின் முக்கிய அம்சமாக தமிழர்களிடையே மதமாற்றம் என்பது மேலோங்கி நிற்கிறது.

ஆதித்தமிழனின் முதல் மதங்களில் ஒன்று இந்துமதம் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை. நாடு கடத்தப்பட்டும் வியாபார நோக்கங்களுக்காகவும் பிழைக்க வேறு வழியின்றியும் இங்கு வந்து குடியேறியவர்கள் தமிழினத்தின் தாராள மனதைப் பயன்படுத்தி ஆட்சிப்பீடங்களைக் கைப்பற்றிய பின்னர் தத்தம் மதத்தினை தமிழினத்தில் திணித்தனர். அவ்வாறாகவே பௌத்தம்,கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமென பல சமயப்பெரும் பிரிவுகள் தமிழினத்தின் தலையிலேயே காலூன்றின.

இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒடுக்கப்பட்ட தமிழினத்தின்மீது பல்வேறுபட்ட மதத்திணிக்கைகள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளது.இதில் குறிப்பிட்ட சில சம்பவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டும் வருகிறது. குறிப்பாக முஸ்லீம் இனத்தவர்கள் வாழும் பிரதேசங்களை அண்டிவாழும் கல்முனை மற்றும் வாழைச்சேனைப் பகுதிகளில் இதுபோன்ற மதமாற்ற நிகழ்வுகள் இடம்பெற்றுவருவதாக புகார்கள் உள்ளன. இது ஒருபுறமிருக்க இன்னுமொரு தரப்பினர் தம்மதத்தினைத் திணிக்கும் முயற்சியில் தலைதூக்கியிருப்பது தமிழினம் விழித்துக்கொள்ள வேண்டிய தருணமே. கிறிஸ்தவத்தின் புதிய ஏற்பாடாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் சில அமைப்பினர் பின்தங்கிய கிராமங்களிலுள்ள மக்களின் வறுமை நிலையைப் பயன்படுத்தி அவர்களை தம்மதத்தின்பால் ஈர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு அதில் சில இடங்களில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

இவ்வாறான சம்பவமொன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குருமண்வெளி என்னும் கிராமத்தில் அரங்கேறியுள்ளது. கடந்த ஐந்து வருடகாலமாக இப்படியான அமைப்பினர் அக்கிராமத்தில் மதப்பிரச்சாரங்களில் ஈடுபட்டதாகவும் சில குடும்பங்களின் வறுமை நிலையைப் பயன்படுத்தி அவர்களைத் தம் மதத்தில் சேர்த்துக்கொண்டதாகவும் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். கடந்த சில தினங்களாக இப்பிரச்சினையானது அக்கிராமத்தில் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இம்மதமாற்றலை தடுப்பது சம்மந்தமாக கடந்த காலங்களில் கிராமத்தில் சில அமைப்புகள் பல முயற்சிகளை எடுத்திருந்தபோதிலும் எம்முயற்சியும் பயனளிக்காத நிலையில் "குருமண்வெளி உதவும் கரங்கள்" அமைப்பினர் தலையீட்டில் ஆலய நிருவாகங்கள்,விளையாட்டுக் கழகங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி அமைப்புகளென அனைவரையும் ஒன்றுதிரட்டி மேற்கொண்ட முயற்சி முதற்கட்ட வெற்றியடைந்துள்ளது. இம்முயற்சியின் பயனாக அம்மத செயற்பாடுகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. மேலும் இதுகுறித்த விசாரணைகள் களுவாஞ்சிகுடி பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றும் வருகிறது.
இவ்வாறாக ஒவ்வொரு கிராம இளைஞர்களும் ஒன்றுதிரண்டு முயற்சித்தால் தத்தங்கிராமங்களில் நடைபெறும் மதம் மாற்றும் சம்பவங்களை முற்றாக நிறுத்தமுடியும் என்பதற்கு "குருமண்வெளி உதவும் கரங்கள்" அமைப்பினர் ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர்.

**புகழ் மயூரா**

## நியூஸிலாந்து வெற்றி

இலங்கை, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையலான இருபதுக்கு இருபது கிரிக்கட் போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

ஒக்லன்டின், ஈடன் பார்க் மைதானத்தில் வெள்ளியன்று இடம்பெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி களம் இறங்கிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை பெற்றது.

நியூசிலாந்து அணி சார்பாக Doug Bracewell 44 ஓட்டங்களையும் Scott Kuggeleijn 35 ஓட்டங்களையும் Ross Taylor 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக கசுன் 3 விக்கெட்டுக்களையும் மலிங்க 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதன்படி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

# உபதேசிய நல்லாளுகை : இலங்கையின் அடுத்த தேவை

இலங்கையில் உபதேசிய மட்டத்தில் நல்லாட்சியை (ஆளுகையை) மேம்படுத்துவதற்கான ஆசிய மன்றத்தின் பயிலரங்கு ஒன்று அண்மையில் மட்டக்களப்பு பாசிக்குடாவில் சிறப்பாக நடத்தப்பட்டது.

உள்ளூராட்சி மட்டத்தில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் ஆசிய மன்றத்தின் இலங்கைக்கான உபதேசிய ஆளுகைத்திட்டம் 9 மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில உள்ளாட்சி மன்றங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு நவம்பர் முதல், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் வெளியுறவு மற்றும் வணிக திணைக்களம், ஆசிய மன்றத்தின் இந்த திட்டத்துக்கு உதவி வருகின்றது.

2005 ஆம் ஆண்டு முதல் இந்த உப ஆளுகைத் திட்டத்துக்கு ஆசிய மன்றம் உதவி வருகின்றது.

மட்டக்களப்பு மாநகர சபை உட்பட பல உள்ளூராட்சி மன்றங்களில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் ஆசிய மன்றம், அந்தந்த சபைகளில் பல திட்டங்களுக்கு அனுசரணை வழங்கி வருகின்றது. அவை பற்றிய மதிப்பீடாகவும், அவற்றின் எதிர்காலச் செயற்பாட்டுக்கான திட்டமிடலாகவும் இது அமைந்தது.



குழு நிலைக் கலந்துரையாடல்கள் மூலம் இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் உள்ள உள்ளாட்சி உறுப்பினர்களிடையே கருத்துப் பகிர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இலங்கையின் அனைத்து இடங்களில் இருந்தும் உள்ளூராட்சி பிரதிநிதிகள், அதிகாரிகள், நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர்.



ஒவ்வொரு விடயமாக ஆழமாக ஆராயப்பட்டன. புரிந்துணர்வுக்கு சிறப்பான களம்.



ஆசிய மன்ற அதிகாரிகள் கூடவே இருந்து சிறப்பான கலந்துரையாடலுக்கு உதவினர்.



சமத்துவத்தையும், அனைவரையும் உள்வாங்கலையும் அடிப்படையாகக் கொண்டு, அனைவரும் சமபங்கு வகிப்பதற்கான ஏற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது.



ஏற்பாட்டாளர்களுக்கு பாராட்டும் நடந்தது.






அவுஸ்திரேலிய ஒருங்கிணைப் பாளரும் கௌரவிக்கப்பட்டார். இவரது பங்களிப்பு சிறப்பு

# மட்டு மாநகரசபை

## மட்டு மாநகரசபைக்குள் தொலைந்துபோன தொல்பொருள் சின்னங்கள்

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் ஒல்லாந்தர், போர்த்திக்கீசர் போன்றவர்களால் நிர்மாணிக்கப்பட்ட புராதனமான, மிகப் பிரதானமான சில நினைவுச் சின்னங்கள் களவாடப்பட்டு விட்டன. இப்போது அல்ல கொஞ்சக் காலமாகவே...

அவைகளை உங்கள் நினைவுக்கு தருகின்றேன்.





### பீரங்கிகள்

அந்தோணியார் தேவாலயத்தின் முன் வாசலில் இருபக்கமும் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த இரண்டு பீரங்கிகள் காணாமல் போய்விட்டன. இவை பெரும்பாலும் களவாடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இன்னும் பெரியோர்கள் மத்தியில் இருக்கிறது.

### பொதிதூக்கி

மட்/இறங்குதுறையான (றேகடியில்) இரண்டு பொதிதூக்கிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவைகளில் இப்போது காட்சியில் இருப்பதைவிட பெரிய பொதிதூக்கியை காணவில்லை. இது எங்கே என நான் விசாரித்தபோது, மட்டக்களப்பில் வசித்த ஒருவர் கொழும்பு இரும்பு வியாபாரியை அழைத்து வந்து அவருக்கு இரண்டு பொதிதூக்கிகளையும் காண்பித்து இவைகளை நான் ஏலத்தில் வாங்கிவிட்டேன். இவைகளை நீங்கள் களற்றி எடுக்கலாம் எனக்கூறி பணத்தை வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டார். பெரிய பாரம்தூக்கியை களற்றிக் கொண்டு போய் விட்டார்கள். அதன் பின் சிறியதைக் கழட்ட வருவார்கள் என கார்த்திருந்த போது எப்படியோ விசயமறிந்து அவர்கள் வரவேயில்லை. அதனால் சிறிய பாரந்தூக்கி தப்பி விட்டது. அதைப் பேரம்பேசி விற்றவர் சில வருடங்களுக்கு முன்பு காலமாகி விட்டார்.

### மின்கம்பம்

லேடிமெனிங்வீதியும் திருமலைவீதியும் சந்திக்கும் இடத்தில் 1917ம் ஆண்டு கட்டப்பட்டிருந்த பொலிஸ் நிலையத்துக்கருகின்சந்தியிலும் ஒல்லாந்தரினால் ஒருமின்கம்பம் நிர்மானிக்கப்பட்டிருந்தது. இம் மின்கம்பம் அழகான வேலைப்பாடுகளை உடையது. இம்மின்கம்பத்தை வர்ணம் பூசி அழகுபடுத்தி அதற்குரிய பாராமரிப்பு வேலைகளை அரங்கம்(முன்னைய) சஞ்சிகை நிறுவனத்தினர் பொறுப்பேற்பதாக அன்றிருந்த கௌரவ மாநகரசபைத் தந்தை செழியன் பேரின்பநாயகம் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். அதற்கு மாநகரபிதா அம்மின்கம்பத்தை மாநகரசபையே அப்பணிகளை செய்யும் என்று கூறி எமது கோரிக்கையை அன்போடு தடுத்துவிட்டார். பின் 1998ம் ஆண்டளவில் அம்மின்கம்பத்தைக் காணவில்லை. உடனடியாக அன்று நுண்கலை பீடாதிபதியாக இருந்த மேமிகு சித்திரலேகா மொனகுரு அவர்களிடம் இவ்விடயத்தை தொலைபேசி மூலம் அறிவித்தேன். அவரும் உடனடியாக மேயரோடு தொடர்பு கொண்டு கம்பத்தை தேடும் படலம் தொடங்கியது. அன்றிருந்த ஆணையாளர் நவநீதன் அவர்களின் முயற்சியினால் மின்கம்பம் கண்டுபிடிக்கப்பட்டது. லேடிமெனிங் தெருவோரம் வடிகால் அமைக்க மண்அகழ்வு வேலை செய்த கொந்துராத்துக்காரரின் ஊழியர்கள் அதன் பெறுமதி தெரியாமல் அதை நாலுபேரும் நாலுதுண்டுகளாக்கி பழைய இரும்புக்கடைக்கு விற்றிருந்தார்கள். அதை ஆணையாளர் நவநீதனின் உத்தரவுக்கமைய நாலுதுண்டுகளையும் பொருத்திய போதும் அதன் பழைய அழகு வரவில்லை.

இப்படியாக நாம் பாதுகாக்க வேண்டிய பொருட்கள் இல்லாமல் போய்விட்டன. கவனம் கல்லடிப் பாலத்தையும் களவாடி விற்று விடுவார்கள்.

## மட்டக்களப்பு மாநகரசபையின் 3 குழந்தை திட்டத்தை பாராட்டிய ஒஸ்லோவின் பிரதி முதல்வர் ஹம்சாயினி குணரெட்ணம்





மட்டக்களப்புக்கு 09-01-2019 அன்று விஜயம்செய்த ஒஸ்லோ மாநகரின் பிரதி முதல்வர் ஹம்சாயினி குணரெட்ணம் மட்டக்களப்பு மாநகரசபைக்கு விஜயம் செய்தார். இவரை மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர்,மாநகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து மாநகரசபை மண்டபத்தில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களுடனான சந்திப்பொன்று நடைபெற்றதுடன் அந்த சந்திப்பில் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த ஒஸ்லோ பிரதி முதல்வர்,

'மட்டக்களப்பு மாநகரசபையானது உண்மையிலேயே சிறப்பான முறையில் செயற்பட்டுவருகின்றது. இங்கு கலந்துரையாடியதற்கு அமைய வருங்காலத்தில் சிறந்த நகர் ஒன்றை உருவாக்க வேண்டுமானல் தற்போது மட்டக்களப்பு மாநகரசபையினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள்போல் திட்டங்களை வகுக்கவேண்டும்.

எமது இயற்கையினை பாதுகாக்கும் விடயத்தில் மிகவும் கவனம் செலுத்தவேண்டிய நிலையில் இருக்கின்றோம். அந்தவகையில் மட்டக்களப்பு மாநகரசபை மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் பாராட்டக்கூடியவை.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மூன்றாவது பிள்ளையினை பெறுபவர்களுக்கு உதவி வழங்க எடுத்த நடவடிக்கை உண்மையில் சிறந்த ஒரு யோசனையாக நான் பார்க்கின்றேன். மாநகரசபையினை சிறந்த வகையில் முன்கொண்டு செல்லவேண்டும் என்ற சிந்தனையிருக்கும்போதே இவ்வாறான யோசனைகள் முன்வைக்கமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

## இதுவும் ஒரு நல்ல ஐடியா



எமது மட்டு நகர் வாவிக்கு பிரசித்தமானது. இது ஒரு வாவி(கடலேரி) நகரம். மட்டக்களப்பு நகரம் வாவியால் சுழப்பட்டதும் கூட. கொழும்பு புறக்கோட்டையில் காணப்படும் மிதக்கும் சந்தை ஓடும் கால்வாயை தூய்மைப்படுத்தி அமைக்கப்பட்ட ஒன்று.



எமது நகரில் இயற்கையாகவே பொதுச்சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ளது மட்டு நகர் வாவி. ஏன் இதில் மிதக்கும் சந்தை ஒன்றை உருவாக்கக்கூடாது.

இதனால் வேலைவாய்பும் சந்தைப்படுத்தலும், ஏன் மாநகரசபையின் அழகும் தரமும் மேம்படும்.

**லியோண்**

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# விளையாட்டு

## சாம்பியன்கள் மூவர் பாராட்டிக் கௌரவிப்பு!



காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கட்துறையில் 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த பந்துவீச்சாளர் பி.மதிராஜ், சிறந்த துடுப்பாட்டவீரர் எல்.சுலக்சன், சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் எ.லோகதாஸ் ஆகிய 3 இளம்வீரர்கள் ஆ.அமிர்தானந்தன் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில்(கழகஇரவில்) பாராட்டிக்கௌரவிக்கப்பட்டனர். அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரனுடன் கழகபோசகர்களான வே.இராஜேந்திரன், வி.ரி.சகாதேவராஜா, சிவ.ஜெகராஜன் ஆகியோர் இணைந்து ஆண்டுச்சாம்பியன் கிண்ணங்களை வீரர்களுக்கு வழங்கிவைத்தபோது எடுத்த படங்கள் இவை.

## பல்துறைச்சாதனை படைத்த வீராங்கனைகளுக்கு பாராட்டுவிழா!



காரைதீவு விளையாட்டுக்கழகத்தினதும் விபுலாநந்த சனசமுக நிலையத்தினதும் வருடாந்த ஒன்றுகூடலும் கழக இரவும் கடந்த சனிக்கிழமை கழகத்தலைவர் ஆனந்தன் அமிர்தானந்தன் தலைமையில் நடைபெற்றன.

காலை அமர்வில் கழகத்தின் மகளிரணிக்கான கௌரவிப்பு விழா இடம்பெற்றது.



இவ்வாண்டில் ஹொக்கி, வலைப்பந்து, மெய்வல்லுனர் கல்வி உள்ளிட்ட சகல துறைகளிலும் சாதனை படைத்த வீராங்கனைகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் இரும்பு மனிதன் எனப் புகழ் பெற்ற மணியம் ஜெயராஜா

மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் முத்திரை பதித்துள்ள வீரர்கள் பற்றிய இப்பத்தியினை வாசிக்கும் கால்பந்தாட்ட இரசிகர்கள் பலர் ஏன் இதுவரை இரும்பு மனிதன் ஜெயராஜாவைப் பற்றி எழுதவில்லை எனக்கேள்வி எழுப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.

இந்த நிலையில் குறித்த திரு.ம.ஜெயராஜா அவர்களைப்பற்றி ஆராய்ந்த போது பல முக்கியமான விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் ஒரு ஜாம்பவானாகப் பிரகாசித்த ரெட்ணசிங்கம் அவர்களுடன் களமாடிய மற்றுமொரு ஜாம்பவான் திரு.ம.ஜெயராஜா என்பதை அறிய முடிகின்றது.

பந்தினை முன்னகர்த்தும் முன்கள வீரர்களைச் சாதுரியமாக சறுக்கல் அடி(ஸ்லீப் சொட்) முறையூடாகத் தடுத்து நிறுத்துவதில் ஒரு நிகரில்லாத பின்கள வீரனாக இவர் திகழ்ந்துள்ளார். இவரது பாணியில் சிலீப் சொட் அடிக்கப் பழகுவதே அந்த நாட்களில் இங்கிருந்த இளம் வீரர்களுக்கு ஒரு சுவாரசியமாக இருந்தது எனலாம். இவருடைய ஆபாரமான ஆட்டத்தின் காரணமாக இரும்பு மனிதன் எனும் பட்டப்பெயர் இவருக்கு இரசிகர்களாலும் இவருடன் களமாடிய சக வீரர்களாலும் வழங்கப்பட்டுள்ளது. கால்பந்தாட்ட இரசிகர்கள் இவரை இரும்பு மனிதன் என்றே அழைக்கிறார்கள்.

இவருடைய கால்பந்தாட்டத்தைப் பற்றிக் கூறும் திரு. சவரிமுத்து மகேசன் அவர்கள் 'அக்காலத்தில் இலங்கையின் கால்பந்தாட்டத்தில் திரு.ம.ஜெயராஜாவைப் போல் ஒரு வீரரை நான் கண்டதேயில்லை' என வியந்து பாராட்டுகின்றார். உண்மைதான் திரு.ம.ஜெயராஜா அவர்களின் கால்பந்தாட்டத்தினை இரசித்த இரசிகர்கள் பலரும் அவர் ஒரு நிகரில்லா வீரன் என்றே புகழ்கிறார்கள். இத்தகைய திறமை கொண்ட வீரர்களுக்கு ஏன் தேசிய அணியில் இடம் கிடைக்கவில்லை என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

இவர் கால்பந்தாட்டத்தில் பின்கள வீரராகப் புகழ் பெற்றாலும் யதார்த்தத்தில் அவர் கால்பந்தாட்டத்தில் ஒரு சகல துறை வீரராகவே தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். கோல் கீப்பராக, முன்கள வீரராக, மத்திய கள வீரராக எனக் கால்பந்தாட்டத்தின் சகல நிலைகளிலும் தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்திய வீரராகவே இவர் விளையாடியுள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா வந்த முதல்தர கழகங்களுக்குச் சவால் கொடுத்த இலங்கையின் கால்பந்தாட்ட அணிகளுள் குறிப்பிடத்தக்க அணியாக மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணி அக்காலங்களில் திகழ்ந்துள்ளது. இவ்வாறு உலகின் முதல்தர கால்பந்தாட்டக் கழகங்களின் முன்கள வீரர்களை எதிர்த்து தனது ஆட்டத்திறனை வெளிக்காட்டிய மட்டுநகரின் மாபெரும் கால்பந்தாட்ட வீரனான திரு.ம.ஜெயராஜா அவர்கள் பிரகாசித்துள்ளார்.

இவ்வாறு மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் ஒரு ஜாம்பவானாகக் களமாடிய திரு ம.ஜெயராஜா அவர்கள் தற்போது மட்டுநகர் தாமரைக்கேணி வீதியில் வசித்து வருகின்றார். இந்தச் சிறந்த வீரரை ஞாபகப்படுத்துவதில் அரங்கம் மகிழ்வடைகின்றது.

## காரைதீவில் தைப்பொங்கல்தின கடற்கரை கரப்பந்தாட்டப்போட்டி!




தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக் கழகம் கடற்கரை கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை இன்று(12) முதல் காரைதீவுக்கடற்கரையில் நடாத்தவுள்ளது.

காரைதீவுப்பிரதேச விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் இப்போட்டிகள் இன்றும்(12) நாளையும்(13) நடைபெறும். இறுதிப்போட்டியும் பரிசளிப்புவிழாவும் தைப்பொங்கல் தினத்தன்று(15) மாலை 4மணியளவில் கடற்கரையில் கழகத்தின் புதிய தலைவர் லோ. சுரேஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

கழகப்போசகர்களான முன்னாள் பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஸ்ணன், நில அளைவயாளர் வே.இராஜேந்திரன், உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக அழைக்கப்பட்டுள்ளனர்.

அமரர் வைரமுத்து நல்லரெத்தினம் நினைவாக நடாத்தப்படவிருக்கும் இப்போட்டியில் ஒரு அணியில் இரு வீரர்கள் பங்கேற்கமுடியும். காரைதீவுக்குட்பட்ட ஒரு கழகத்திலிருந்து எத்தனை அணிகளும் கலந்துகொள்ளலாம். சீருடை கட்டாயமானதாகுமென புதிய செயலாளர் தி.கோகுலவாசன் தெரிவித்தார்.
(காரைதீவு நிருபர் சகா)

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## வடக்கு பகுதி மக்களுக்கு கை கொடுத்த கோட்டைமுனை விளையாட்டுக்கழகம்







வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களுக்காக கோட்டைமுனை விளையாட்டுக் கழகம் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மா.உதயகுமார் அவர்களிடமும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவான் அவர்களிடமும் 18.12.2018 அன்று காலை கையளித்தது.

அண்மையில் வடபகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு உதவும் நோக்குடன் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கழகம் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கழகத்தின் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதி சு.காசிப்பிள்ளை மற்றும் இ.சிவநாதன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மா.உதயகுமார் அவர்களிடமும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவான் அவர்களிடமும் கையளித்தனர். இதன் போது கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதற்குரிய சகல ஏற்பாடுகளையும் கழகத்தின் தலைவரான பே.சடாற்சரராஜா அவர்களும் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதியான செ.ரஞ்சனும் மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 18

## இலங்கை அதிபர் சேவை தரம் III போட்டிப் பரீட்சை

- மட்டுநகர் யுவன் -

### கிரகித்தல் (பொது அறிவுறுத்தல்கள்)

- கிரகித்தல் வினாத்தாளைப் பொறுத்தவரையில் பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்வது நல்லது.
  1. உரைப்பகுதியினை மூன்றிலொரு பங்காக அல்லது சொல்லப்பட்ட சொல் எண்ணிக்கைக்கு ஏற்பச் சுருக்கி எழுதுதல்.
  2. தலையங்கம் இடுதல்.
  3. தரப்பட்ட உரைப்பகுதியின் பிரதான கருத்தை இயன்றளவு சுருக்கி, தனிவாக்கியத்தில் எழுதுதல்.
  4. தடித்த எழுத்துக்களிலுள்ள சொல்லின் அல்லது சொற்றொடரின் கருத்தை விளக்குதல்.
  5. உரைப்பகுதியுடன் மிகப் பொருத்தமாக அமைகின்ற கூற்றினைத் தெரிவுசெய்தல்.
  6. உரைப்பகுதியின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுதல்
  7. (சிலவேளைகளில் குறிப்பிட்ட சொல் எண்ணிக்கையில் அமையுமாறு கட்டுரை எழுதும்படி கேட்கப்படலாம்).

- 1. மேற் சொன்ன விடயங்கள் எல்லாம் ஒரே வினாத்தாளில் அமையலாம் அல்லது அமையாது வரலாம்.
  2. எப்படியோ ஆகக் குறைந்தது இரண்டு விடயங்களுக்குக் குறையாமல் வர வாய்ப்புண்டு.

1. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 30 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. இதற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

"சுதந்திரத்திற்கு முன்னர் கட்டணம் அறவிடும் ஆங்கிலக் கல்விப் பள்ளிக்கூடங்கள், கட்டணம் அறவிடாத சிங்கள மற்றும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் என்ற இரட்டைமுறைக் கல்வி காணப்பட்டது. கல்விமீதான அரசின் செலவினம் நகர்ப்புற ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுக்குச் சாதகமாக இருந்த வேளையில் கிராமப்புறப் பள்ளிக்கூடங்கள் பெருமளவிற்குப் புறக்கணிப்பட்டன. 1944இல் சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கராவின் அறிக்கை இப்பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பரந்த செயல்விளைவுடைய விதப்புரைகளை மேற்கொண்டது. இவ்வறிக்கையின் முக்கிய விதப்புரைகளைத் தொடர்ந்து அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் வரையிலான இலவசக்கல்வி 1945இல் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புறங்களிலுள்ள திறமை வாய்ந்த ஆனால் வசதி குறைந்த மாணவர்கள் தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு மத்திய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1945இல் சிங்களமும் தமிழும் போதனா மொழிகளாக மாறின. பள்ளிச் சிறார்களுக்கான நண்பகல் உணவு ஏற்பாடும் 1945இல் தொடங்கப்பட்டதுடன் சுதந்திரத்தை மீளப் பெற்ற போதும் நடைமுறையிலிருந்தது."

2. பின்வரும் உரைப்பகுதியினை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக. இதற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

"திருக்குறளை ஆழ்ந்து கற்கும் போது அது ஒழுக்கம், அன்பு, அருள், பண்பாடு, ஆன்மிகம், அறம் ஆகியவை நிறைந்த குடிமக்களைக் கட்டமைக்க முனைவதைக் காணமுடியும். அப்பிரசைகள் ஒவ்வொருவரும் சாந்துணையும் கற்போராய் விளங்குவதைக் காணலாம். இதனூடாகச் சம உரிமைகள் பெற்ற மக்களையுடைய குடிமைச் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பத் திருக்குறள் முனைகிறது. இன்றைய ஜனநாயகத் தேசங்களுக்கான பல அம்சங்களை இக்குடிமைச் சமூகம் வாயிலாக இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னரே திருக்குறளினால் வெளிப்படுத்த முனைந்தமை வியப்பைத் தரவல்லது. இவ்வாறு கற்றோர் சமூகத்தை விழைவதன் பேறாக இன்றைய கல்விச்அசிந்தனைகளோடு மிகமிக அதிக பொருத்தப்பாட்டைத் திருக்குறள் பெற்றுள்ளமை கவனிப்புக்குரியது. வேறு எந்த ஒரு சிந்தனையாளரும் இந்தளவான சமச்சீர்க் கல்விமுறையொன்றுக்கான பொருத்தப்பாட்டைப் பெற்றிருக்கவில்லை எனத் துணிந்து கூறமுடியும்."

3. (i) பின்வரும் பந்தியிலுள்ள பிரதான கருத்தை இயன்றளவு சுருக்கி, ஒரு தனிவாக்கியத்தில் எழுதுக.
   (ii) தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்றொடரின் கருத்தை, உரைப்பகுதியின் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி எழுதுக.

"கல்வி புதிய விழுமியம் உடையதாகவும் மனித தத்துவத்தை வளர்ப்பதாகவும் முழு மனிதனைத் தோற்றுவிப்பதாகவும் அமைய வேண்டும். மனிதனை மனிதப் பண்புகளாகிய அன்பு, இரக்கம், பரஸ்பர உதவி, விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, பிறர் கருத்தை மதித்தல், பொதுநல நோக்கு போன்ற மனிதப் பண்புகளை விருத்திசெய்து தாம் வாழும் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வியறிவு இன்றியமையாதது ஆகும். வாழ்க்கை என்பது ஆண், பெண் இருபாலாரும் இணைந்து தமது குடும்பத்தின் நல்வாழ்விற்காக மட்டும் வாழ்வது என்ற குறுகிய நோக்கம் அல்லாது தாம் பெற்றெடுத்த குழந்தைகளை நாட்டிற்குத் தேவையான பிரஜைகளை உருவாக்குவதுமாகும்."

# கற்போம்

## உயிரியல் அறிமுகம்

குணம் சவரிராஜா

### உயிரியல் சார்பான பிரச்சினைகள்

1. இயற்கை வளங்கள் என்றால் என்ன?
நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தப்படுவதும் பொருளாதார அபிவிருத்திக் உதவுவதுமான இயற்கையில் காணப்படும் பொருட்கள் மற்றும் சக்தி வளங்களே இயற்கை வளங்கள் ஆகும்.

2. இயற்கை வளங்களின் மிதமிஞ்சிய சுரண்டல் காரணமாக பல்வேறுபட்ட சூழல் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. அவற்றினுள் மூன்றினைக் குறிப்பிடுக.
- சூழல் மாசடைதல்
- உயிர்ப்பல்வகைமை இழப்பு
- பாலைவனமாதல்.

3. நீடித்துநிலைபெறும் உணவு உற்பத்தி (Sustainable Food Production) என்றால் என்ன?
சூழலுக்குரிய பாதுகாப்பான முறைகளைப் பயன்படுத்தி மனித சனத்தொகைக்குப் போதிய அளவுகளில் உணவை உற்பத்தி செய்வதே நீடித்து நிலைபெறும் உணவு உற்பத்தியாகும்.

4. நீடித்துநிலைபெறும் உணவு உற்பத்தியைப் பேணுவதற்குப் பிரயோகிக்கப்படக்கூடிய மூன்று நடைமுறைகளைக் கூறுக.
- உயர் விளைச்சலைத் தரும் தாவர, விலங்கு வர்க்கங்களின் உற்பத்திசெய்தல்.
- நோயெதிர்ப்புத்தன்மையுள்ள தாவர, விலங்குப் பேதங்களை விருத்திசெய்தல்.
- அறுவடையின் பின்னான தொழில்நுட்ப முறைகளை முன்னேற்றுதல்.

5. தாவர வாழ்க்கையை விளங்கிக்கொள்ளவேண்டியதன் அவசியம் யாது?
- தாவரங்களே உலகில் பிரதான உற்பத்தியாளர்கள் ஆகும். எல்லா விலங்குகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தாவரங்களிலேயே தங்கியுள்ளன.
- உலக சனத்தொகை அதிகரிப்பதால் நாம் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது.
- ஆகவே உயர் விளைச்சலைத் தரும் தாவரங்களையும் நோயெதிர்ப்புத் தன்மையுள்ள தாவரங்களையும் உற்பத்திபண்ணுவதற்கு தாவரங்களின் தொழிற்பாடு பற்றிய அறிவும் உயிரியலும் முக்கியமானவையாகும்.

6. ஆரோக்கியமான ஒரு உடலைப் பேணுவதற்கு நோய்கள், அவற்றுக்கான காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றிய அறிவை ஒருவர் கொண்டிருக்க வேண்டும். தற்பொழுது உலகில் காணப்படும் மூன்று பெரும் வகையான நோய்களைக் குறிப்பிட்டு அவற்றுக்கு உதாரணங்கள் தருக.

- தற்போது உலகில் காணப்படும் புற்றுநோய்கள், இதய நோய்கள், நீரழிவு, நாட்பட்ட சிறுநீரக நோய்கள் போன்ற ஆபத்தான நோய்கள் சமூகரீதியான தொற்றா நோய்கள் ஆகும்.
- டெங்கு, எயிட்ஸ்(AIDS ) போன்றவை தொற்று நோய்கள் ஆகும்.
- இறப்பை ஏற்படுத்தும் முன்னணி நோய்களுள் ஒன்று புற்றுநோய் ஆகும்
- AIDS - இது ஆபத்தானதும் உலகம் பூராவும் வளரும் பாரிய சுகாதாரப் பிரச்சினையை ஏற்படுத்துவதுமான ஒரு வைரஸ் நோயாகும்.
- இதயக்கலன் நோய்கள் - இவையும் உலகம் பூராவும் வளரும் சுகாதாரப் பிரச்சினையை ஏற்படுத்தும் ஆபத்தான நோய்களாகும்.
- மாரடைப்பு (heart attack) ஒரு இதயக் கலன் நோயாகும்.
- நாட்பட்ட சிறுநீரக நோய்கள் (Chronic Renal Diseases)- இலங்கையில் அண்மைக் காலமாக ஒரு பாரிய சுகாதாரப் பிரச்சினையாக இருந்து வரும் நோயாகும்.

7. உயிரியல் சார்பான அறிவும் எண்ணக்கருக்களும் சில சட்டரீதியான (legal) மற்றும் ஒழுக்கரீதியான (ethical) பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, அத்தகைய சந்தர்ப்பங்களில் உதவும் உயிரியலுக்குரிய தீர்வுச் செயன்முறை ஒன்றைக் குறிப்பிடுக

- பெற்றோர் மரபுத்தன்மையைச் சோதித்தல் (parentage testing)
- குற்றவியல் ஆய்வுகள்
- குடிவரவு பிணக்குகள்

மேற்படி சந்தர்ப்பங்களில் DNA விரலடையாளமெடுத்தல் (DNA Fingerprinting) பயன்படுத்தப்படுகின்றது.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# ஆசிரியர்களே, மாணவர்களே, பெற்றோரே!

## ஒரு மாணவனின் எதிர்காலம் குறித்த அச்சம்..

(நிச்சயமாக இது ஒரு மாணவன் எழுதியதே. சாத்தியமான பழிவாங்கல்களை தவிர்க்க பெயர் தவிர்க்கப்படுகின்றது. - ஆசிரியர்)

அனைத்து மாணவர்களும் எதிர்பார்த்துக் காத்திருந்த க.பொ.த (உயர்தர)ப் பரீட்சை முடிவுகள் கடந்த டிசம்பர் மாதம் 29ஆம் திகதி வெளியானது. தற்போது கிடைத்த தகவல்களை வைத்தும் எமது மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளை வைத்தும் நோக்கும் போது எமது சமூகம் எங்கு செல்கிறது என்ற பயம் எனக்குள் எழுகிறது. அன்றைய காலத்தில் பல வைத்தியர்களும், பொறியியலாளர்களும் உருவாகிய மண் மட்டக்களப்பு என எனது அம்மப்பா கூறக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் இன்றைய நிலையை யோசிக்கும் போது, எமது சமூகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாணவர்கள் யார் என்ற வினா என் மனதுக்குள் எழ என் மனமே அதற்கு பதிலும் சொல்லிவிட்டது. ஆனால் அந்த பதில் எந்த அளவிற்குப் பொருத்தமானது என எனக்குத் தெரியவில்லை. மாணவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாணவர்கள் ஆசிரியர்களா? மாணவர்களா? பெற்றோர்களா? அல்லது சமூக நிறுவனங்களா? யார் அதற்குப் பொறுப்புக் கூறப் போபவர்கள்?

மாணவர்களுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் இரண்டாம் நாள் முடிந்தவுடனே பாடசாலை வாயில்களில் ஒரு கூட்டம் வந்துநிற்கும் விளம்பரங்களைத் தாங்கிய வண்ணம். என்னவென்று விசாரித்தால், 'க.பொ.த உயர் தரத்திற்கான வகுப்புக்கள் ஆரம்பம். நகரின் பிரபல ஆசிரியர்கள் கற்பிப்பார்கள், வந்துவிடுங்கள்' என்று. எனினும் அம்மாணவன் சாதாரண தரப் பரீட்சையை முழுமையாக எழுதி முடித்திருக்கமாட்டான். பரீட்சை முடிந்தவுடன் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு கூட்டம் கூட்டமாக ஒரு வாயிலை நோக்கிச் செல்வர். நீங்கள் நினைப்பது போன்று விளையாட்டு மைதானத்தை நோக்கி அல்ல. பிரத்தியேகக் கல்விக் கூடங்களை நோக்கி. சென்றவுடன் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்த பின்னர் இன்ன திகதிக்கு வாருங்கள் அட்மிசன் பீஸ் இவ்வளவு, ஒரு மணித்தியாலத்திற்கு இவ்வளவு என அனுப்பி வைப்பார்கள். எங்கே கல்வி பேரம் பேசப்படுகிறதோ அங்கே கல்வி சீரழியத் தொடங்குகிறது.

மாணவர்களின் பெறுபேறுகளின் வீழ்ச்சியில் ஆசிரியர்களின் பங்களிப்பு

இருபது முப்பது மாணவர்களை வைத்துக் கொண்டு நகைச்சுவை கலந்த கற்பித்தலை வழங்கும் ஆசான்களை விட நானூறு ஐந்நூறு பிள்ளைகளுக்கு நக்கல் கலந்த கற்பித்தலை திணிக்கும் ஆசிரியர்கள்தான் அதிகம். (தொப்பி அளவானவர்கள் போட்டுக் கொள்ளவும்) நானூறு பிள்ளைகளுக்கு ஒலிவாங்கியில் காசை டியுசன் பீஸ் எனும் பெயரில் வாங்கி, வாங்கிக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆசிரியர்கள் உங்களுக்கு இவ்வாறு கற்பித்திருந்தால் நீங்கள் தற்போது உங்களிடம் வரும் மாணவர்களுக்குக் கற்பித்துக்கொண்டிருக்க முடியுமா?

வாய்வார்த்தைக்குக் கேட்பதை விடுத்து, எப்போதாவது தனிப்பட்ட ரீதியில் மாணவர்களை அழைத்து 'நான் கற்பித்தது உனக்குப் புரிந்ததா? புரியாவிடின் உனக்குப் புரியும் படி கற்பிக்கும் வேறு ஆசிரியரிடம் செல்லலாமே,, என்று கேட்டிருக்கிறீர்களா? அப்படிக் கேட்பது என்றாலும் முதல் மூன்று வரிசை மாணவர்களே கேட்பீர்கள். கடைசி வரிசை மாணவர்களை என்றாவது கேட்டதுண்டா? அவன் உங்கள் புதிய வீட்டிற்கான சீமேந்து பக்கற் வாங்குவதற்கும், உங்களின் காரிற்குப் பெற்றோல் அடிப்பதற்குமான பணத்தையே வழங்கிச் செல்கிறான். வகுப்பு வைக்கின்றீர்களே என்றாவது நேரத்துக்குச் சென்றதுண்டா? ஏழு மணி வகுப்பிற்கு ஏழு இருபதுக்குத்தானே செல்கிறீர்கள். (குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும்) பரீட்சை வைக்கிறீர்களே என்றாவது உரிய கால இடைவெளியில் பரீட்சைகளை வைத்து நீங்களே திருத்திக் கொடுக்கின்றீர்களா?

எல்லாத் தவறுகளையும் உங்கள் மீது சுமத்த முடியாது. இவ்வாறான ஆசான்களிடம் தானே எமது பெற்றோர்கள் வகுப்பிற்கு அனுப்புகின்றனர். ஆசிரியர் எனும் பெயருக்குத் தகுதியில்லாதவர்களே இன்று பெரும்பாலான பிரத்தியேக கல்வி நிலையங்களில் கற்பிக்கின்றனர்.

அண்ணா என்று அழைக்கப்பட்டவர்கள் சேர் ஆகினர். அக்கா என்று அழைக்கபட்டவர்கள் டீச்சர் ஆகினர். இதுதானே எமது சமூகத்தின் கல்வியில் ஏற்பட்ட மாற்றம். இன்றும் சேர் என அழைக்கப்படுபவர்கள் பாடசாலையில் கற்பிப்பதில்லை. அவர் பரீட்சை திருத்தப் பணிகளில் ஈடுபட்டதில்லை. அவருக்கு மாணவர்கள் விடும் தவறுகள் என்னவென்று தெரியாது. அப்படிப்பட்ட ஆசான் தன்னிடம் வரும் மாணவர்களுக்கு எவ்வாறு கற்பிப்பார்? கற்பிப்பதற்குத் தகைமை தேவையில்லை தகுதியும் திறமையும் போதும் என தன்மீது சுட்டப்படும் குற்றச்சாட்டுக்களை சாமத்தியமாகத் தகர்க்கும் ஆசிரியர்கள், தன்னிடம் வரும் மாணவர்களில் ஐம்பது வீதமானோரை ஏன் இருபத்தைந்து வீதமானோரை சித்தி பெறச் செய்யலாமே. கேட்டால் 'பிள்ளைகள் படிக்குதில்லை நான் என்ன செய்வது,, என்ற போலிப் பேச்சு.

மாணவர்களின் பெறுபேறுகளின் வீழ்ச்சியில் பெற்றோர்களின் செல்வாக்கு

நான் என்ன படிக்க வேண்டும் என்பதை மாணவர்களே முடிவு செய்ய வேண்டும். ஏனெனின் அவனுக்குத்தான் தெரியும் தனக்கு என்ன இயலும் என்ன இயலாது என்று. எனினும் பெற்றோர் அம்முடிவை தாமே எடுக்கின்றனர் தனது போலிக் கௌரவத்திற்காக. (எல்லாப் பெற்றோர்களும் அல்ல) இதனால் சீரழிவது மாணவர்களின் வாழ்க்கையே. மேல் வீட்டில டொக்டர் இருக்கு. கீழ் வீட்டில எஞ்சினியர் இருக்கு. எதிர்த்த வீட்டில லோயர் இருக்கு. உங்க வீட்டில யார் இருக்கா என்று பக்கத்து வீட்டுக்காரன் கேட்டுவிடுவானோ என்ற பயத்தில் டேபிள் மேட்டை விற்பது போன்று தனது பிள்ளைகளையும் கல்விக்காக விற்கிறார்கள் பெற்றோர்கள். பெரும்பாலான பெற்றோர்கள் விடும் பெரிய தவறு யாதெனின் பிறருடன் ஒப்பிடுவது. 'அவனால் தொண்ணூற்றெட்டு புள்ளிகளை பெற முடிகிறது என்றால் ஏன் உன்னால் பெற முடியவில்லை,, என்று ஒப்பிடுகின்றனர். அம் மாணவனால் அப் பகுதியில் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை. எனினும் வேறு பகுதிகளில் சாமர்த்தியவானாக காணப்படுவான். இவ்வாறு ஒப்பிடுவதனால் அவருக்கு அந்தப் பாடத்தில் இருந்த விருப்பம் வெறுப்பாக மாறிவிடுகிறது. அதற்கு பெற்றோர்களே பொறுப்பு.

மாணவர்களே... எல்லாத் தவறுகளையும் ஆசிரியர்கள் மீதும், பெற்றோர்கள் மீதும் சுமத்தி விடமுடியாது. அதில் உங்களுக்கும் பங்கு உண்டு. உன்னால் முடியவில்லை எனின் ஏன் அந்தப் பாடநெறியை தெரிவு செய்கிறாய். 'நண்பர்கள் அந்த வகுப்பிற்குச் செல்கின்றார். ஆகவே நானும் அங்கே தான் செல்ல வேண்டும்,, என பெற்றோரை அதட்டுகின்றீர்கள். வேறுவழியின்றி பெற்றோர்களும் அதற்கு ஒப்புக் கொள்கின்றனர். பிறருக்காக வாழாதே. பிறரை உனக்காக வாழும்படி மாற்று. வெற்றி நிச்சயம். மாணவர்கள் எதிர்நோக்கும் மற்றொரு சவால் உள்ளது. பாடசாலையில் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியரிடமே பிரத்தியேக வகுப்பிற்கு செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாத மாணவனை அல்லது மாணவியை பாடசாலையில் அவ் ஆசிரியர் ஒதுக்கி வைப்பார். தண்டிப்பார். ஆகவே அந்தப் பிள்ளையும் வேறு வழியின்றி அவ்வாசிரியரிடமே செல்ல நேரிடுகிறது.

**மாற்றத்தை விரும்பும்**
**“மாணவன்”**

இவ்வாறான காரணங்களாலே எமது சமூகம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்த இடத்தில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வருக்கு நன்றி செலுத்த வேண்டும். அவரின் செயற்பாட்டினாலேயே மாணவர்கள் இரண்டு வாரம் (14 நாட்கள்) வகுப்புக்கள் ஏதுமின்றிச் சுதந்திரமாகச் செயற்பட்டனர். இல்லையென்றால், கல்விக் கூடம் எனும் சிறைச்சாலையில் கைதிகளாக்கப்பட்டிருப்பர்.

படிப்பித்துவிட்டால் போதும் என நினைக்கும் ஆசிரியர்களும், படிப்பிப்பதைப் படித்தால் மட்டும் போதும் என நினைக்கும் மாணவர்களும், பிள்ளை படித்தால் மட்டும் போதும் என நினைக்கும் பெற்றோர்களும் உள்ள வரை இந்நிலை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

ஆசிரியர்களே... மாணவர்களே... பெற்றோர்களே...

உங்களின் அலட்சியம் எமது சமூகத்தின் நாளைய அபாயம்.
இக் கட்டுரையில் பிரசுரிக்கப்படும் வார்த்தைகள் யார் மனதையும் புண்படுத்துவதற்காக எழுதப்பட்டவை அல்ல. எமது சமூகத்தின் வளர்ச்சியை கருத்திற் கொண்டு எழுதப்பட்டவை. இவ் வார்த்தைகள் யார் மனதையாவது புண்படுத்தியிருந்தால் என்னை மன்னித்து விடவும். ஏனெனின் தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு.

குறிப்பு : நான் எழுதியது உண்மையாகவே தவறு என்றால் கூறுங்கள் திருந்தி(யபின்) எழுதுவேன். உங்கள் தவறுகளை மறைக்க நான் கூறியது தவறு என்றால் நீங்கள் திருந்தும் வரை எழுதுவேன்.

# தந்தை செல்வா கூறிய சிறுகதை




1957.07.21 ல் தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மட்டக்களப்பு மத்திய கல்லூரி மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போது கூறிய சிறுகதையிது. இக்கதையில் வரும் கோஸ்டியின் தலைவரோடு இன்றைய தலைவர்களை நீங்கள் ஒப்பிட்டு பார்த்தால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல.

சுயநலம்

தலைவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதை ஒரு சிறு உதாரணங்காட்டி விளக்க விரும்புகிறேன். கிரிக்கெட் பந்தாட்டக் கோஸ்டி ஒன்றில் திறமையான ஆட்டக்காரர் ஒருவர் இருந்தார். அவர் தான் ஆடும்போது சர்வஜாக்கிரதையாக இருந்து எல்லோரைக் காட்டிலும் பன்மடங்கு சிறப்பாகப் போற்றத்தக்க வகையில் தன் பங்கைச் செய்வார். தன் ஆட்டம்முடிந்ததும் அவர் உடனே தன்பாட்டில் போய்விடுவார். கூட நின்று தன் கோஸ்டியினரை உற்சாகப்படுத்தி அவர்களையும் நன்றாக ஆடவைக்க அவர் நினைப்பதேயில்லை. அவரின் எண்ணம் சிந்தனையெல்லாம் தன் சொந்தத் திறமை புகழ் வெற்றி இவற்றிலேதான் இருந்தது.

பொதுநலம்

இன்னொரு கோஸ்டியில் மற்றொருவர் இருந்தார். அவர் முன்னவரைப் போலத் திறமைசாலி இல்லைதான். என்றாலும் அவர் தான் மட்டும் நன்றாக ஆடினால் போதாது. கோஸ்டியிலுள்ள எல்லோருமே நன்றாக ஆடவேண்டும். அப்போதுதான் கோஸ்டிக்கு வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கையுடையவர். எனவே தன் ஆட்டம் முடிந்த பின்னும் எங்கும் செல்லாது பந்தாட்ட மைதானத்திலேயே நின்று தன் கோஸ்டியினரை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.

பலாபலன்

இந்த இருவரும் எதை விரும்பினார்களோ அது அவர்களுக்கு கிடைக்கத்தான் செய்தது. முன்னவர் கிரிக்கெட் பந்தாட்டத்தில் பெரியபுலி என்று பெயரெடுத்தார். பின்னவருக்கு அவரது கோஸ்டி மிகத்திறமையானது என்ற பெயரும் புகழும் கிடைத்தது. கூடவே அந்த பெயருக்கும் புகழுக்கும் பாத்திரராயிருந்த அனைவரையும் அனைவரும் பாராட்டினர். எனவே நாட்டின் தலைவர்களும் தம் மக்களுக்காக உழைத்தால் புகழ் மக்களுக்கும் அவர்களுக்கும் சேர்தாற்போலக் கிடைக்கும். அதுவே நல்லதும் கூட. திரு.செல்வநாயகம் மேலும் பேசுகையில்; "தலைவர்கள் வெறும் திறைமைசாலிகளாக இருந்தால் போதாது. அவர்கள் சிறந்த குணசீலர்களாகவும் இருக்க வேண்டும். அவர்களே தேசத்துக்கு நல்ல வழிகாட்டிகளாய் அமைவார்கள். என்று சொன்னார்.

# கிழக்கின் கலைஞர் அமரர் நா. குமாரவேல் அவர்களின் ஓராண்டு நினைவு



மலர்கின்ற மலர்களெல்லாம் இறையடி சேர்வதில்லை, பூவுலக மாந்தர்களெல்லாம் மகிமை பெறுவதில்லை. அந்தகைய பேறுபெற்றவர்கள் இறையாசி பெற்றவர்களே. அத்தகைய பேறுபெற்றவர்களில் மறைந்த கிரானூர் ஓவியர் கலாபூசணம் நாகண்டாப்போடி குமாரவேலும் ஒருவராவார்.

கிரான் பதியில் நாகண்டாப்போடி பொன்னம்மா தம்பதியினரின் ஐந்தாவது மகனாக 1950.07.22 ஆம் திகதியன்று பிறந்தவர் குமாரவேல். இளமைப் பராயத்திலிருந்து ஏதாவது கிறுக்கிக்கொண்டே இருக்கிற குமாரவேலின் கலையார்வத்தை உணர்ந்து கொண்ட பாடசாலையின் அதிபரான கிரானைச் சேர்ந்த சி.சிவலிங்கம், இவரின் கலையார்வத்தை வளர்க்க உதவினார்.

திரு.நா.குமாரவேல் அவர்கள் தனது 13 ஆவது வயதிலிருந்து புத்தகங்களுக்கான அட்டைப்படங்கள் மற்றும் பத்திரிகைக்களுக்கான படங்கள் வரையத்தொடங்கினார். படிப்பை முடித்த கையோடு 17 வயதிலே காகிதாலையில் ஓர் சித்திர வண்ண கலைஞருக்கான நியமனம் பெற்றுக்கொண்டமை, இவரின் கலைத்திறனை மேம்படுத்த உறுதுணையாக இருந்தது. அத்தோடு நின்றுவிடாது தன் கலைசார்ந்த படைப்பாளிகளைத் தேடிச்சென்று ஓவியக்கலைசார் நுட்பங்களை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

இந்தியாவின் தமிழ் நாட்டில் கலைக்கல்வியோடு சேவையும் செய்து புகழ் பெற்ற ஓவியக்கலைஞரும் வைத்தியருமான கலாபூசணம் திரு.மா.பி. குமார் அவர்களிடமும் யாழ் மண்பெற்ற புகழ் பூத்த ஓவியக்கலைஞர் மணியம் அண்ணா அவர்களிடமும் பயிற்சியும் கலைநுட்பமும் பெற்றார். மேலும் சிற்பம் மற்றும் வர்ணப்பூச்சு கலைஞரான யாழ் தாமோதரம்பிள்ளை அவர்களிடமும் பயிற்சியும் ஆசியும் பெற்றார். கடல் கடந்து பிரபல தென்னிந்திய கலைஞர் விற்பன்னர் ஓவியர் திரு.வீரசந்தானம் அவர்களிடமும் பயிற்சிபெற்று தேர்ந்தவர். கடும் முயற்சியினால் கலைத்திறனை வளர்த்துக் கொண்ட குமாரவேல், நா.கு.வேல் எனக் கலைஞராக தனது திறமைகளை வெளிப்படுத்தத் தொடங்கினார்.

நா.கு.வேல் அட்டைப்படங்கள் மற்றும் பத்திரிகைக்களுக்கான படங்கள் வரைவதில் ஆவர்வம் காட்டினார். இதில் வியத்தகு பிரகாசத்துடன் கூடிய உயிரோட்டமான ஓவியங்களைப் படைத்திருக்கிறார். கிழக்கொளி மற்றும் ஔவை ஆகிய கையெழுத்துப் பத்திரிகையின் கையெழுத்து மற்றும் அதற்கான ஓவியங்கள் இவரால் வரையப்பட்டவை. மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையினால் வெளியிடப்படும் சஞ்சிகையின் அட்டைப்படத்திற்கு சாகுந்தலம் எனும் ஓவியம் இவரால் வரையப்பட்டது. அது முதல் பரிசு



பெற்றதுடன் பலராலும் பாராட்டப்பட்டது.

திரு. நா.குமாரவேல் அவர்கள் பணிபுரிந்த, கவனிப்பாரற்று பாராமுகமாக இருந்த காகித ஆலையை அவ்வவ்போது அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட வரலாற்று நிகழ்வுகளுக்கான பிரமாண்ட வரவேற்புத்தோரணங்கள் மற்றும் அலங்கரிப்பு, ஓவியக்கண்காட்சிப் போட்டிகளில் தன் கைவண்ணத்தால் உயிர்பெறச்செய்து முழுநாடும் வியந்து பாராட்டிப் பரிசில்களையும் நற்பெயரையும் புகழையும் ஈட்டிக்கொடுத்து, துவண்டுகிடந்த காகித ஆலையை அனைவரும் தலைநிமிர்ந்து வியப்போடு பார்க்க வைத்த பெருமை நா.கு.வேல் அவர்களையே சாரும். நுஓPழ 70 எனும் தேசிய கண்காட்சியில் வாழைச்சேனை காகிதாலையின் ஆக்கத்தை வடிவமைத்து தேசிய ரீதியில் ஆலையையும் பெயர் பெறச்செய்தமைக்காக இவருக்கு பாராட்டி விருது வழங்கப்பட்டது

வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற காப்பிய பெருவிழாவிற்கு வரைந்த கண்ணகி ஓவியம் பலரது பாராட்டையும் பெற்றதொரு கலைப்படைப்பாகும்.

1973 இல் தந்தை செல்வாவின் கிழக்கு விஜயத்தின் போது அவரின் ஓவியத்தை உயிரோட்டத்துடன் வரைந்து தன்கலைத்திறத்தை வெளிப்படுத்தினார். அ.அமிர்தலிங்கம், ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிறேமதாஸ, திருமதி.சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க,

**ந. குழந்தைவேல்**

டி.பி.விஜயதுங்க மற்றும் வி.முரளிதரன், சி.சந்திரகாந்தன் உட்பட இன்னும் பல பிரமுகர்களின் உருவப்படங்களை காலத்திற்கு காலம் வரைந்து பாராட்டுக்களையும் பெற்றார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்து கடவுள்களின் திருவுருவப்படங்கள், திரைச்சீலைகள்; நாயன்மார்கள், இயேசு கிறிஸ்து, புத்த பிரானின் ஓவியங்கள் என்பவற்றையும் அழகாக வரைந்த படைப்பாளி குமாரவேல்.

இந்து ஆலயக்கோபுர சிற்பங்களுக்கு

தொடர்ச்சி... (பக்கம் -15)




# விதைப்பந்துகளை மீளுருவாக்கம் செய்யும் ஆய்வறிவாளன் றியாஸ் அகமட்

திரு றியாஸ் அகமட் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்து, அப்பல்கலைக்கழகத்திலேயே விலங்கியல் துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து, தற்போது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையில் சிரேஸ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்ற ஓர் ஆய்வறிவாளர்.

விலங்கியல் துறையினைச் சேர்ந்தவராக இவர் இருந்தாலும் படிக்கும் நாட்களிலும் விரிவுரையாற்றும் காலத்திலும் கலைத்துறையினருடன் குறிப்பாக நுண்கலைத்துறையினருடன் மிகவும் நெருக்கமான தொடர்புகளைப் பேணிய ஒருவராக இயங்கியவர் இன்றும் இயங்கி வருபவர்.

இதன் காரணமாக விலங்கியல் துறை சார்ந்த ஆய்வறிவுடன் கூடிய சிறுகதைத் தொகுதி ஒன்றினை இவர் பல்கலைக்கழக நாட்களிலே வெளியிட்டார். "விலங்கு நடத்தைகள்" எனும் பெயரில் இச்சிறுகதைத்தொகுதி மூன்றாவதுமனிதன் வெளியீடாக வெளிவந்துள்ளது. இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள பெரும்பாலான சிறுகதைகள் குரங்குகள் மற்றும் விலங்குகள் பற்றிய இவருடைய ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன.

இத்துடன் "சரிநிகர்" பத்திரிகையில் இவர் எழுதிய சூழலியல் ஏகாதிபத்தியம் பற்றிய கட்டுரைகள் மிகவும் முக்கியமானவை, இவையும் நூலாக வெளிவந்துள்ளன.

இவ்விதமாக கலை, இலக்கியம், சூழலியல், பண்பாடு, பெண்ணிலைவாதம், அரசியல், விஞ்ஞானம், விவசாயம், விலங்கியல் எனப் பல்துறைகள் சார்ந்தும் அதிக ஆர்வத்துடனும் பிரக்ஞையுடனும் செயலாற்றி வரும் ஒரு ஆய்வறிவாளராகிய றியாஸ் அகமட் அவர்கள் அண்மைய வருடங்களிலிருந்து முன்னெடுத்து வரும் செயற்பாடாக விதைப்பந்துகளை விதைக்கும் நடவடிக்கை விளங்கி வருகின்றது.



உலகின் மனிதகுல வரலாற்றில் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே புழக்கத்தில் இருந்துள்ள இந்த நடைமுறையினை றியாஸ் அகமட் அவர்கள் நாம் வாழும் இந்தப் பூமியில் மீண்டும் பயில்வுக்குக் கொண்டுவர முயன்று வருகின்றார்.

ஒரு ஆராய்ச்சியாளருக்கே உரிய பண்புகளுடன் தான் கற்பிக்கும் மாணவர்களுடன் விதைப்பந்துகளை உருவாக்கும் செயற்றிட்டத்தை பரிசோதனைகளூடாக நடைமுறைப்படுத்தத் தொடங்கி முன்னெடுத்த போது வெற்றிகரமான நிலையினை அடைந்ததுடன் இன்று மெல்ல மெல்ல இதன் தேவையும் முக்கியத்துவமும் உணர்ந்த ஆக்கபூர்வமான மனிதர்களால் வலிமையடைந்து பரவலாக்கம் பெற்று வருகின்றது.

விதைப்பந்துகள் செய்து விதைக்கும் முறையினைப் பற்றி தான் ஆக்கியுள்ள விதைப்பந்துகளை விதைப்போம் எனும் தெருவெளி நாடகத்தில் பின்வருமாறு விபரித்துள்ளார்.

'ஐந்து பங்கு களியும், ஒரு பங்கு சாணமும்,

ஒரு பங்கு சேதனப் பசளையும் கலந்து



ரொட்டிக்கு மாவு பிசைவது போல பிசைய வேணும்

பிசைந்த பின்னர் பந்துகளாக அவைகளை நாங்கள் ஆக்கிட வேண்டும்

ஆக்கிய பந்துள் நமக்கு உகந்த மரங்களின் விதைகளை வைத்திடல் வேண்டும்

விதைகளை வைத்ததும் விதைப்பந்தெனவே பெயரும் சூட்டி அழைத்திடல் வேண்டும்

ஒரு நாள் நிழலிலும் ஒரு நாள் வெயிலிலும் குளிர்த்தி உலர்த்தி எடுத்திட வேண்டும்'

பந்து வந்தது விதைப் பந்து வந்தது
பந்து வந்தது விதைப் பந்து வந்தது
வரட்சியை ஒழிக்க பந்து வந்தது
விருட்சங்கள் ஆக்கும் பந்து வந்தது
மண் வளத்தைக் காக்க வந்தது

**து.கௌரீஸ்வரன்**

மண்சரிவைத் தடுக்க வந்தது

சரி சரி இந்த விதைப்பந்துகள எப்ப எவ்வாறு நிலத்தில விதைக்கிற?
மழைகாலம் தொடங்குவதற்கு முன்னால் விதைக்க வேணும்

நாம உள்ளூரிலயும் வெளியூர்களிலயும் சுற்றுலாச் செல்லும் போது விதைக்கலாம்!.

நீண்ட பிரயாணங்கள், நடை பவனிகள் செல்லும் போதும் தேவையான இடங்களில விதைக்கலாம்!

மலைகள் ஏறும் போதும் விதைப்பந்துகள விதைக்கலாம்!

வீசிய விதை ஒரு ஆண்டு வரை பாதிப்பில்லாமல் விதைப்பந்தினுள் இருக்கும்

மழை பெஞ்சி
களி கரைஞ்சி
விதை முளைச்சி
விரைவாக மரமாகி
பெரும் வனமாகும்.
வளர்ந்தால் மரம்
இல்லையேல் மண்ணுக்கு உரம்'

என இலகுவாகவும் எளிமையாகவும் முயற்சியுள்ள மனிதர்கள் அனைவராலும் செய்யக் கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு செயல்முறையாகவும் முன்மொழிகின்றார். இதுவே இச்செயல்வாதத்தின் முக்கியத்துவமாகும்.

நவீன உலகமயமாக்கலின் சூழலியல் ஏகாதிபத்தியத்தை எதிர்கொண்டு நமது சூழலின் பேண்தகு தன்மையினை பாதுகாக்கும் வகையிலான தாவரவியல் மீளுருவாக்கச் செயற்பாடாகவே இந்த விதைப்பந்துகளை விதைக்கும் நடைமுறை அடையாளங் காணப்படுகின்றது.

பின்காலனித்துவ பின்நவீனத்துவப் பின்னணியில் சமூகந்தழுவிய மீளுருவாக்கல் செயற்பாடுகள் குறித்த ஆழ்ந்த அறிவும் அதுசார்ந்த சிந்தனையும் தேடலும் மிக்க ஆய்வறிவுச் செயற்பாட்டாளராக திரு றியாஸ் அகமட் அவர்கள் பயணித்து வருவதன் பிரதிபலிப்பாகவே இந்த விதைப்பந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு மீளுருவாக்கம் பெற்றுள்ளன எனலாம்.

---

# பெண்களின் உடையில் அரசியல் இருக்கிறதா?

அண்மையில் வேஷ்டி தினம் கொண்டாடப்பட்டது. பல ஆண்களது வண்ண வண்ண படங்கள் வேஷ்டியுடன் பதிவேற்றப்பட்டத்தை சமூக வலைத்தளங்களில் காண முடிந்தது. ஆனால் பெண்கள் வேஷ்டி அணிந்த படங்களை காணமுடியவில்லை. ஆனால் நான் வேஷ்டி அணிந்து படத்தை பிரசுரித்தேன். இங்கு ஒரு விடயத்தை குறிப்பிடவே நான் விரும்புகிறேன் .

ஆண், பெண் அணியும் உடைக்கு பின்னால் பெரும் அரசியல் உள்ளது . என்னது உடைக்கு பின்னும் அரசியலா என்று நீங்கள் நினைக்ககூடும். ஆம் உள்ளது, அரசியல் உள்ளது. முக்கியமாக உலகத்தில் உள்ள உடை வடிவமைப்பளர்கள் எல்லோருமே ஆண்களாகத்தான் இருக்கின்றனர் என்பது மேலதிக தகவல். நீங்கள் இது பற்றி அறிய கூகிள் ஆண்டவரை நாடலாம் .

முதலாவதாக அன்று தொடக்கம் இன்றுவரை ஆண்களின் உடைகளின் போக்கேட் இருக்கும், அவர்கள் பணத்தை தன்னுடன் வைத்து கொள்வதற்காக எல்லா ஆடைகளிலும் பை இருக்கும். அது வாலாமணி என்று சொல்லும் அங்கியாக



**எஸ்.ரி. நளினி திருநாவுக்கரசு**

இருந்தாலும் இன்று அணியும் ஷர்ட், டி ஷர்ட், குட்டை களிசான் நீண்ட களிசான் என்பவற்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட போக்கட் இருக்கும்.

ஆனால் பெண்களின் உடைகளில் இந்த பை இருக்காது . இப்போது சில உடைகளில் பை வைத்தே பெண்கள் உடை தைக்கின்றனர். அதாகப்பட்டது பெண்கள் அதிகாரத்தை தரும் பணத்தை வைத்துகொள்ள அவளுடைய உடையில் போக்கேட் இருக்க கூடாது என்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது .

இரண்டாவது, உலகத்தில் உள்ள எல்லா பெண்களுக்கான பாரம்பரிய உடைகள் அவளுடைய அசைவை, நடையை கட்டுப்படுத்தும் உடைகளாக காணப்படுகின்றன. உடைகளில் புடவை, வெள்ளைகாரி உடுக்கும் இறுக்கமான குட்டை பாவாடை, ஜப்பானிய பெண்கள் அணியும் கிமோனோ ஆடையும் மிருவடிகட்டை போன்ற பாதணிகள், அபாயா, நீட்டமான சட்டை ( கௌன் ) இவை ஆத்திர அவசரத்துக்கு அவளை ஓட விடாது, மேலதிகமாக அவளுடைய அசைவை கட்டுபடுத்த குதி உயர்ந்த பாத அணிகள் வடிவைமைக்கபட்டு சந்தையில் உள்ளன. நாய் துரத்தினால் கூட எந்த ஆபத்திலும் அவளால் வேகமாக ஓட முடியாதபடி அவள் உடை அணிய பழக்கப்படுத்தப்படிருகின்றாள்.

ஆண்களுக்கு அவ்வாறல்ல அவர்களுடைய உடைகள் அவர்களின் நடையை, அசைவை கட்டுப்படுத்தாது, இலகுவான சௌகரியமான உடை. இதனால்தான் என்னவோ பெண்கள் ஜீன்ஸ் அணிவது அதிகமாய் உள்ளது.

முதலாவது பணம் பெண்ணிடம் இருக்க கூடாது என்பதற்காக ஆடை வடிவமைப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. காரணம் பணம் தான் அதிகாரத்தை தரக்கூடியது , பணம் இருந்தால் தீர்மானம் எடுக்கும் நிலைக்கு பெண்கள் வந்துவிடுவார்கள். ஆகவே பெண்கள் தீர்மானம் எடுப்பவர்களாக இருக்கக் கூடாது என்பதில் சமூகம் மிக்ககவனமாக இருந்துள்ளது .

இரண்டாவதாக நான் கூறியது போல் நடையை கட்டுபடுத்தி உள்ளது. பெண் ஒரு குறிப்பிட்ட இடத்தை விட்டு சௌகரியமாக விரைவாக நகரக்கூடாது . தன கட்டுபாட்டில் அவள் இருக்க வேண்டும். பாலியல் துஷ்பிரயூகம் வன்புணர்வு செய்ய யாரும் துரத்தினால் கூட அவளால் தன்னை பாதுகாப்பது கடினம். தனக்கு தன வீட்டில் ஒரு துன்பம் அல்லது ஆபத்து நடந்தால் கூட அவளால் விரைவாக வீட்டை விட்டு நகர முடியாது. இதுக்கு சுனாமியில் பல பெண்கள் மரித்தது ஒரு உதாரணம். ஒன்று உடை

தொடர்ச்சி... (பக்கம் -15)

தொடர்ச்சி...

## பொங்கல் விழா -- தோற்றமும் வளர்ச்சியும்

காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்தமிழர்களின் வாழ்க்கையாகும்.

காட்டு விலங்குகளிலொன்றாகிய மாட்டைப்பிடித்து பழக்கி காடும் காடு சார்ந்த நிலமாகிய முல்லையில் மழையை நம்பி அதாவது வானம் பார்த்த பூமியில் மாடுகளைக்கொண்டு உழுது மானாவரி வேளாண்மை செய்யத்தலைப்பட்டனர் முல்லைத்தமிழர்கள். குறிஞ்சி நிலத்தில் உழாமல் விதைத்தவர்கள் முல்லைநிலத்தில் மாடுகளின் துணை கொண்டு உழுது விதைத்தனர்.

முல்லை நிலத்தமிழர்கள் வாழக்கையில் மாடுகளை எவன் கூடுதல் உடமைகளாகக் கொண்டிருந்தானோ அவனே செல்வம் நிறைந்தவனாக கருதப்பட்டான். இவனால் மாடு என்பதற்கு செல்வம் என்றும் தமிழில் பொருள் கொள்ளப்படலாயிற்று. ஆண்மகன் ஒருவனின் வீரத்தை வெளிப்படுத்தும் ஏறு தழுவுதல் எனும் விளையாட்டும் முல்லை நில மக்களிடையே அறிமுகமானது. சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையில் முல்லைக்கலியைப்பாடிய சோழநல் உருத்திரனார் எனும் புலவர் ஏறு தழுவலைப்பதிவு செய்துள்ளார். சங்கமருவிய காலத்து இலக்கியமான சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் காப்பியத்தின் ஆச்சியர் குரவையில் ஏறு தழுவுதல் பற்றிய குறிப்புகளை பதிவு செய்துள்ளார். சமுதாய வளர்ச்சிப்படி நிலையில் குறிஞ்சி நிலத்து வேட்டைச்சமுதாய வாழ்வில் தொடங்கிய புதிது உண்ணும் நிகழ்வுடன் முல்லை நிலத்தில் மேய்ச்சல் சமுதாயமாக வளர்ச்சி பெற்றபோது ஏறுதழுவல் எனும் விளையாட்டும் இணைணந்து கொண்டது. இன்று தைப்பொங்கலை அடுத்து மறுநாள் கொண்டாடப்படும் மாட்டுப்பொங்கலின் தோற்றுவாய் அன்றைய முல்லைநிலத் தமிழர்களின் வீரவிளையாட்டான ஏறுதழுவலே ஆகும். குறிஞ்சியல் தோற்றம் பெற்ற பொங்கல் விழாவுடன் முல்லையின் ஏறுதழுவல் விழாவும் இணைந்துகொள்ள கால ஓட்டத்தில் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களின்போது தைப்பொங்கல் விழாவுடன் மறுநாள் மாட்டுப்பொங்கலும் இணைந்துகொண்டது.

மேய்ச்சல் தொழில் செய்து பட்டிகள் வைத்து மானாவரி வேளாண்மை செய்து வாழ்ந்து வந்த முல்லைநிலத்தமிழர்கள் அடுத்தபடியாக நீர்வளம் மிக்க ஆற்றோரங்களை நாடிச்சென்று குடியேறிக் குறைந்த உடலுலைப்பில் கூடிய விளைச்சலைப் பெற்று ஓரிடத்தில் நிரந்தரமாக வாழவிடங்களை அமைத்து வாழத்தொடங்கிய நாகரீகமடைந்த வாழ்க்கைதான் வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தமிழர்களின் வாழ்க்கையாகும். அவர்கள் வாழ்ந்த நிலையான குடியிருப்பே ஊர் என்றாயிற்று. நதிக்கரையோரங்களில்தான் நாகரீகம் தோன்றி வளர்ந்தது என்பதே வரலாறு சுட்டும் உண்மையாகும்.

பின் நாகரீகமடைந்த மருதநிலத்தமிழர்களுக்கு கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்தை நோக்கிச்செல்ல வேண்டிய தேவை எழுந்தது. பண்டங்களைக் கடல் வழியாகக் கொண்டு செல்ல தலைப்பட்ட வணிக வாழ்க்கையே நெய்தல்நில வாழ்க்கையாக தொடங்கிற்று. தமிழர்கள் செய்த முதல் வணிகம் உப்பு வணிகம்தான். நெய்தல் நிலத்தில் தோற்றம்பெற்ற வணிகம் தரை வழியே வளர்ந்த போது சாத்து என்றும் கடல் வழியே வளர்ந்தபோது நாய்கம் எனவும் பெயர் பெற்றது.

பூமியை நிலத்தை பண்டைத்தமிழர்கள் நானிலம் என அழைத்த காரணத்திலேயே உலகம் என்பதைக் குறிப்பதற்கு நானிலம் என்ற சொல்லும் தமிழில் வழங்கப்படலாயிற்று. வேட்டைச்சமுகம் வேளாண்மைச்சமுகமாக மாறிய போது விளைச்சலைத்தரும் மழைக்கு காரணமான சூரியனுக்கு நன்றி செலுத்தும் இயற்கை வழிபாடாக பொங்கல் விழா மாற்றம் கண்டது.

குறிஞ்சியில் தினையை பால் உலை ஏற்றிப்பொங்கி உண்டதன் நீட்சியே இன்று பால் உலையேற்றி நாமிடும் அரிசிப்பொங்கல் ஆகும். குறிஞ்சியில் தினைப்பொங்கலாகத்தோற்றமிட்டு, முல்லையில் ஏறுதழுவல் விளையாட்டுடன் இணைந்து, மருத நிலத்தில் குடியேறிய தமிழர்களின் வாழ்வு நாகரீக வளர்ச்சியடைந்து, கால ஓட்டத்தில் செவ்வியல் தன்மை பெற்று இன்று கொண்டாடப்பெறும் பொங்கல் விழாவாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்கின்றது.

காலை 8.45 மணியளவில் வழங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் பழைய மாணவர்சங்கத் தலைவர் வீ.தர்சன்,செயலாளரும் வைத்திய கலாநிதியுமான நவரெட்ணம் மௌலீசன்,பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எந்திரி வை.கோபிநாத்,பிரதியதிபர்களான எஸ்.சதீஸ்வரன்,இ.இலங்கேஸ்வரன் மற்றும் பழையமாணவர் சமூகத்தினர் கலந்துகொண்டார்கள்.

தொடர்ச்சி...

## பெண்களின் உடையில் அரசியல் இருக்கிறதா?

அமைப்பால் இலகுவாக அலையினுள் சிக்குண்டு மடிந்தனர், இன்னும் பலரின் ஆடைகள் களையப்பட்டதால் அவர்கள் வெட்கத்தால் வெளியில் வராமல் இரண்டாவது அலையால் மாண்டனர்.

நான் ஏற்கனவே கூறியது போன்று பெண்கள் ஆண்களின் பலவித உடைகளையும் இப்போது அணிகின்றனர். ஆனால் பெண்களின் உடைகளை ஆண்கள் அணிவதில்லை. அப்படி அணிவது கேவலமான நிலைக்கு ஆண்களை தள்ளுகிறது. எதையாவது தைரியமாக செய்து முடிக்காத ஆண்களைப்பர்த்து சொல்லுவார்கள் “கால்சட்டையை கழட்டிவிட்டு சேலை உடு“ அல்லது “இவனுக்கு சேலை ஒன்று வேண்டி கொடுங்கள்“ என்று. பெண்ணின் உடையை அணிவது தரக்குறைவு ஆண்மைக்கு அழகல்ல என்ற கற்பிதங்கள் இன்னும் நாம் எவ்வளவு முன்னேறினாலும் சமூகத்தில் ஊறிபோய் ஊள்ளது .

ஆகவே நான் மேல் குறிப்பிட்டது போல் உடை வடிவமைப்புக் கூட ஆணுக்கு பெண் சமனில்லை, ஆணை விட பெண் தரம் குறைந்தவள் என்பதை மீள உறுதிப்படுத்தும் விதமாகவும், பெண் என்றாலே கேவலம் என்ற எண்ணத்தை நிலைநாட்டவும் தான் அன்று தொடக்கம் இன்றுவரை பெண்கள் ஆண்களுக்கான ஆடைகள், அணிகலன்கள், பாத அணிகள் உருவாக்கம் பெறுகின்றன .

இப்போது சொல்லுங்கள் ஆடையில் அரசியல் இருக்கா, இல்லையா ?

தொடர்ச்சி...

## கிழக்குக் ஹர்த்தால்: அரை வெற்றி - அரைத் தோல்வி

மிகவும் குறைவு.

சில இடங்களில் சில சம்பவங்கள் இடம்பெற்றன. அதேவேளை திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இந்த ஹர்த்தால் காரணமாக பெரிதாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. தூரத் தமிழ்க் கிராமங்கள் அமைதியாக இருந்தன. கடைகள் மூடப்பட்டிருந்தன. இங்கும் ஹர்த்தாலுக்கான அழைப்பு பலமானதாக இருக்கவில்லை என்றும் ஒரு அடையாளத்தை தரக்கூடிய தரப்புக்கள் அழைப்பு விடுக்காததால் ஹர்த்தால் பிசுபிசுத்துப் போனதாக செய்தியாளர்கள் கூறுகிறார்கள். இந்த இரு மாவட்டங்களிலும் அனைத்து பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் வழமைபோல நடந்தன. போக்குவரத்தும் பாதிக்கப்படவில்லை.
மூன்று மாவட்டங்களிலும் மக்கள் நடமாட்டத்தை பொறுத்தவரை பெரிதும் பாதிப்பு ஏதும் ஏற்பட்டதாகக் கூறமுடியவில்லை. மட்டக்களப்பு நகரில் குறைந்த அளவிலாயினும் பரவலாக மக்கள் நடமாட்டம் இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் பொதுமக்கள் நடமாட்டம் சகஜமாக காணப்பட்டது.

தொடர்ச்சி...

## சர்வதேச விவசாய ஆய்வு மாநாடு



பொங்கலூர் இந்தியன் தோட்டக்கலை ஆய்வு மையத்தின் பிரதான விஞ்ஞானி காலநிதி ஈ.சிறினிவாய் ராவ் சிறப்புரையாற்றினார்.

மாநாட்டில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளில் 28 வெவ்வேறுபட்ட விவசாயம் சார்ந்த ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன.

கிழக்குப் பலைக்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி த.ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் பிரதி உபவேந்தர் வைத்திய கலாநிதி ஈ.கருணாகரன், விவசாய பீடாதிபதி பி.சிவராஜா, கலை கலாசார பீடாதிபதி மு.ரவி, விஞ்ஞான பீடாதிபதி கலாநிதி எம்.வினோபாவா, வர்தக துறை பீடாதிபதி திருமதி வி.ராகல், கிழக்குப் பல்கலைக் கழக பதிவாளர் ஏ.பகிரதன் ஆய்வாளர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி...

## *கிழக்கின் கலைஞர் அமரர் நா. குமாரவேல் அவர்களின் ஓராண்டு நினைவு*

வர்ணந்தீட்டி உயிரோட்டமிக்க கடவுளர்களாக செய்வது இவரின் தனித்திறமை. கொழும்பு ஜிந்துப்பிட்டி கதிரேசர் சுவாமி கோயில், கிரான் மகா காளி அம்பாள் ஆலயம், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு காளிகோயில், வாழைச்சேனை காகிதாலை பிள்ளையார் ஆலயம், கறுவாக்கேணி முத்துமாரியம்மன் கோயில் உட்பட் இன்னும் பல கோயில்கள் அவரின் வர்ணந்தீட்டலில் உயிர்பெற்றவை.

2003 இல் இவர் இந்தியா சென்றிருந்த போது திமுக கட்சியின் வரலாறு தொடர்பிலான இவர் வரைந்த இரண்டு படங்கள் சென்னையிலுள்ள அண்ணா அறிவாலயத்தில் இன்னும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தம் உயிரிலும் மேலாக மதித்த ஓவியக்கலை சம்பந்தமாக எதுவரை எட்ட முடியிமோ அதுவரை எட்டிப்பிடித்து கற்றறிந்து கலையாக்கங்களை சகலரும் பாராட்டும்படி படைத்தவர்.

மறைந்த மாபெரும் ஓவியகலைஞர் நா.கு.வேல் அவர்களது வாழ்வில் மறக்கமுடியாத திருப்புமுனையாக கடந்த 2006 ஆம் ஆண்டு இலங்கை அரசவிருதான கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையானது அவரது கலையுலகப் பயணத்திற்கான கௌரவமாக அமைந்தது எனலாம்.

மேலும் எமது மட்டுமாநகர் தந்த கவியரசு செ.குணரெத்தினம் அவர்களுடன் குமாரவேலும் வாழைச்சேனை காகிதாலையில் ஒன்றாக வேலை செய்ததுடன் மிக நெருங்கிய தொடர்பினையும் வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. அடுத்து எளிமையான இனிமையான ஒரு கவிஞர் கறுவாக்கேணி கலாபூசணம் முத்துமாதவன் அவர்களுடனும் இணைபிரியாத நண்பர்களான இசை, நாடகம், எழுத்து ஓவியம், போன்ற பல்துறை கலைஞரான கிண்ணையடியைச் சேர்ந்த என் கே.தயாளகுணசீலன் மற்றும் இசைக்கலைஞரும் பாடகருமான கிரானைச் சேர்ந்த ம.சுந்தரலிங்கம் ஆகியோரின் கலைத்தொடர்புடன் கூடிய நீண்ட கால நட்பும் ஊக்குவிப்பும் இவரது ஓவியக்கலை வளர்ச்சிக்கு காரணமாயிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இவரைக்கரம்பிடித்த வாழ்க்கைத்துணைவியான திருமதி தேவராதா குமாரவேல் அவர்கள் இவரது படைப்புக்களுக்கு இரவு பகல் பாராது ஒத்தாசை வழங்கியமையும் இவரது கலைவாழ்க்கைக்கு மகுடமாக அமைந்தது.

இவரின் கலை வாரிசாக இவரது மூத்த மகன் கு.வினுக்குமார் அவர்கள் இவரது கலைப்பயணத்தை முன்னெடுத்து செல்லுகின்றார் என்பதற்கு அவர் தனது தந்தையாரின் 31 ஆம் நாள் அஞ்சலிக்காக வரைந்து முடித்த தந்தையாரின் உருவப்படம் சான்றுபகர்கின்றது.

இப்படியான பேறுபெற்ற ஓவியக் கலைஞரான நா.குமாரவேல் அவர்களுக்கு மரியாதை கலந்த வணக்கம் சொல்லி இவர் ஓர் சாகாப்தம் எனக் கூறிக்கொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

போருக்குப் பின்னரான இலங்கையில் சமூக - பொருளாதார மீளுருவாக்கம் குறித்து இந்த மாநாடு ஆராயும். வழங்கப்படும் உதவிகளை விநியோகிப்பதில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு, செயற்பாடு குறித்து இது விவாதிக்கும்.

இந்த வகையில், போருக்கு பின்னரான தேவைகள் தொடர்பில் எந்த அளவுக்கு புலம்பெயர் மக்களின் பங்களிப்பு இருக்கிறது என்பதையும், கருத்துருவாக்க சிந்தனைகளிலும் மற்றும் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புக்கான கொள்கையிலும் இதுவரையிலான அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து கற்றுக்கொண்டவற்றை அர்த்தமுள்ள வகையில் எவ்வாறு பிரயோகிப்பது என்றும் இந்த மாநாடு ஆராயும்.

# சிறப்பு மாநாடு



## இலங்கையில் போருக்குப் பின்னரான சமூக - பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு

இடம் : புலையவெளி கிராமம், பதுளை வீதி, செங்கலடி, மட்டக்களப்பு

காலம் : 19 (சனிக்கிழமை), ஜனவரி, 2019

**ஏற்பாடு: புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத்தமிழர்கள் அமைப்பு (பிரித்தானியா)**




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa